அமரர் கி. அருணாசலம் ... அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சிவசுந்தரி அருணாசலம்
குருபாதம், சீர்காழி.

# தோடுடைய செவியன்

என்னும்

# தேவார உரை.

---

சீகாழி (கழுமலவளநகர்)
திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் சைவசமய குருகுல வெளியீடு.

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதா வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு.



வேதா கமப்பவுரி வீசுங் களாசநிலை
ஆதார வெற்பி லபிடேகம்—போதத்
திருளிலெழு பாநு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருபாதம்.

# தோடுடைய செவியன்

என்னும்

# தேவார விரிவுரை.

சீகாழி

(கழுமலவளநகர்)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் சைவசமய குருகுல்வெளியீடு.

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டசந்தானத்துத்

தருமபுர ஆதீனத்தில் இருபத்துநாலாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள்

சீகாழியில் நடைபெற்ற

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின்

முப்பத்தேழாவது ஆண்டுவிழாச் சைவமகாநாட்டினைத்

திறந்துவைத்து ஆசியுரையருளிய

நினைவுமலராக வெளியிடப்பெற்றது.

சித்திரபாநுளு மார்கழிமீ 12உ

27—12—42.

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்

எப்பொருளு மாக்குவா னீசனே யெனுமுணர்வும்
அப்பொருடா னுளுடையா னடியார்க ளெனுமறிவும்
இப்படியா லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் — நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.



வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருபாதம்.

# முன்னுரை.

---

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

உலகெலாம் போற்றும் சைவத் தெய்வத் தமிழ் மறைகளாகிய திருமுறைகள் பன்னிரண்டனுள்ளே திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த திருமுறை மூன்றனுள் முதற் திருமுறையின் முதலாவது திருப்பதிகம் குருவருள் என்பதனைக் குறிக்கோளாக உடையது என்பது "தோடு கூற்றுப் பித்தா மூன்றும், பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" என்பதனால் அறியலாகும். சிவபாதவிருதயர் பிரமதீர்த்தக்கரையினின்று எச்சின் மயங்கிட உனக்கு இப்பாலடிசில் இட்டாரைக் காட்டென்று கையிலே சிறியதொரு மாறுகொண்டோச்சியபோது அச் சிறிய பெருந்தகையார் காலெடுத்து உச்சியின் மேலெடுத்தருளிய ஒரு திருக் கை விரலால் சுட்டி ஆனந்தக்கண்ணீர் துளித்து நின்று தாதையார்க்கு அடையாளங்களுடன் தமக்கருள் தந்த பரம்பொருளின் இயல்பு தெரித்துக் காட்டியருளிய அம் முதற் பதிகத்தின் முதலாவது திருப்பாடலுக்குச் சிதம்பரம் சிவஞானத் திருத்தளியின் தாபகராகிய ஸ்ரீமத் செப்பறைச்சுவாமிகள் எழுதிவைத்திருந்த விரிவுரை ஷியூர்ச், சி.ப. முதலியார் பாடசாலைத் தேவார ஆசிரியர், திரு. இராமலிங்க ஓதுவார் அவர்களால் பெற்று, சூரியனார்கோயிலாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகளின் அடியார் திருக்கூட்டத்துள் ஒருவராகிய ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளால் பரிசோதிப்பிக்கப் பெற்றது.

இது திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்துத் தருமபுர ஆதீனத்தில் இருபத்து நான்காவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் [illegible]யிலே நடைபெற்ற சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாசத்தின் முப்பத்தேழாவது ஆண்டுவிழாச் சைவ மகாநாட்டைத் திறந்துவைத்து ஆசியுரை யருளியதன் நினைவு மலராக வெளியிடப்பெற்றது.

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள மெல்லாம் பெருகுக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

இங்ஙனம்,
தருமபுரஆதீனத் திருக்கூட்டத்தினருள் ஒருவனாகிய
திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமடம்
27—12—42 மௌனம்
**சோமசுந்தரத்தம்பிரான்.**

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

---

## இவ்வுரையாசிரியர் வரலாறு.

யாழ்ப்பாணத்தில் சைவ வேளாளர் மரபில் பிறந்த இவ்வுரையாசிரியர் சிறு பிராயத்திலேயே நித்தியாநித்திய உணர்வு தோன்றியமையால் குடும்பத்தினின்றும் பற்றற்று இந்தியாவுக்கு வந்து திருநெல்வேலிக்குச் சமீபமாயுள்ள செப்பறை என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அழகிய கூத்தக் குருக்களையா அவர்களுடைய திருமடத்தில் பலகாலம் தங்கி இருந்தார். சற்சங்கப் பழக்கமும் சாஸ்திரஉணர்ச்சியும் வளர்வதாயின. காஷாயம் தரித்துத் துறவியாகவே அம்மடாதிபதியின் ஆதரவில் இருந்தார். தம் பால்ய பருவம் முழுதும் க்ஷேத்திர யாத்திரை நடந்தே தெரிசனம் செய்தார். காசி முதல் கன்னியாகுமரி வரை தீர்த்தமும் ஆடினார். சிதம்பரத்தில் வந்து ஒரு வீட்டைத் தனக்கென விலைக்கு வாங்கி அதற்குச் சிவஞானத்திருத்தளியெனப் பெயர்புனைந்து அதில் பல ச[illegible] வாழ்ந்திருந்தார். சிதம்பரத்திலுள்ளவர்கள் இவரைச் செப்பறையிலிருந்து வந்தபடியால் செப்பறைச் சுவாமி என்பார்கள். செப்பறைக்குச் சென்றால் சிதம்பரத்தில் இருக்கும் காரணம் பற்றிச் சிதம்பரசுவாமி என்பார்கள். காரணப்பெயர் வழங்கவே இயற்பெயர் விளங்கவில்லை. பின்னர் இவ்விரு பெயரும் கொள்ளாமல் புத்தகங்களில் தன் குருவால் தரப்பெற்ற பெயர் வழங்கலாயிற்று.

அஃதாவது மெய்கண்டதேவர் உரைமுகமாணுக்கர் என்பது. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமடத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மௌனகுரு சுவாமிகளிடம் உபதேசம்பெற்ற ஸ்ரீ தாயுமான சுவாமிகள் ஆதீனமாகிய திருத்தென்குடித்திட்டை என்னும் பாடல் பெற்ற சிவதலத்தினை கீழ்பாலுள்ள அன்னப்பன் பேட்டை ஆதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ சபாபதி தாயுமான தேசிக சுவாமிகளிடத்தில் தீக்ஷை மந்திரகாஷாயம் பெற்றுச் சிவ பூசை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அங்கே சிலகாலம் தங்கி யிருந்தார். அப்போது அக் குருமூர்த்திகள் இவர் மெய்கண்ட சாத்திரம் முழுவதும் படித்துத் தெளிந்திருத்தலை அறிந்து 'மெய் கண்டதேவர் உரைமுக மாணுக்கன்' என்று உனக்கு நாம் பெயரிட்டிருக்கிறோம் என்று சொல்ல, குருமொழியைச் சிரமேற்கொண்டு மனதிலேயே வைத்திருந்து சிவஞானத் திருத்தளிக்குச் சிலா சர்சனம் செய்தபொழுது அப்பெயர் எழுதுவித்தார்கள். அதன் பிறகுதான் இவர் பெயர் வெளிவந்தது இன்னும் இவர்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்கு மாறாக யாராவது பேசினாலும் எழுதி னாலும் உடனே அதற்கு மறுப்பு எழுதிப் புத்தி புகட்டுவார். படித்தவர்கள் அநேகருக்கு இவரைப்பற்றி நன்கு தெரியும். சிதம் பரத்திற்குச் சமீபமாக உள்ள ஆடூர் முதலாகிய பல ஊர்களில் இவரை ஆதரிக்கும் அன்பர்கள் உண்டு. அங்கங்கே சென்று அவர்களுக்குத் தீக்ஷை, சிவபூசை முதலிய செய்வித்துச் சித்தாந்த சாஸ்திரமும் பாடஞ் சொல்லிவைத்தார். அவர் உபதேசப்படி அநேகங் கிராமங்களில் சிவாலயங்கள், விநாயகர் ஆலயங்கள் கட்டப் பட்டிருக்கின்றன. பிரபல மாணுக்கர்களுமுண்டு. சிவப்பிரகாசம் பிள்ளை, கணபதிப்பிள்ளை, பெரியசாமிப்பிள்ளை முதலியோர் இவ ரிடம் சித்தாந்த சாத்திரங்கள் பாடம் கேட்டவர்கள். தமிழ் வடமொழி இரண்டிலும் நல்ல பயிற்சியுமுண்டு. ஆதலால் அநேக மொழி பெயர்ப்பு நூல்களும், மறுப்புநூல்களும் செய்திருக்கிறார். ஸ்ரீ நடராஜ ஓதுவாமூர்த்திகள் வேண்டுகோளின்படி தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, பெரியபுராணம் இவைகளில் 50 அரிய பாடல்களுக்கு விரிவுரை செய்திருக்கிறார். மாசற்ற துறவி யாய்க் காலமெல்லாம் சாஸ்திரத்திலேயே கழித்து மாணுக்கருக்கு உபதேசித்து மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தெரிவித்துத் தன் குருமூர்த்தி இருக்கும் அன்னப்பன்பேட்டைக்குப்போய் தன் வாழ்நாள் முடிவைத்தெரிவித்துத் தன் பூசைப்படிகலிங்கம் மெய் கண்டதேவர், திருநந்திதேவர் இம்மூன்று மூர்த்திகளையும் பூசை மேடையில் வைத்துப் பூசித்துவிட்டுப் பெட்டகத்தில் மூர்த்திகளை எடுத்துவைத்தொடுக்காமல் விரித்தபடியே இருக்க சிவபரம் பொருளின் திருவடி நிழல் சேர்ந்தார். (பிரமோதூத வருஷம் புரட்டாசி மாதம் 13உ திங்கட்கிழமை மூல நக்ஷத்திரம்)

—

## இவ்வுரை வந்த வரலாறு.

சிதம்பரத்துக்கு ஷை அடிகள் வந்தபோது, சி. ப. முதலியார் தேவாரபாடசாலை ஆசிரியர் ஸ்ரீ நடராஜ ஓதுவாமூர்த்தியவர்கள் இவ்வடிகளின் கல்விப் புலமை கண்டு புகழ்ந்து பாடசாலை அதிபர் பழநியப்ப முதலியார் அவர்களிடம் இப்பெரியார் நமக்குச் சமீபமாக இருந்தால் நல்லது என்று சொல்ல முதலியாரும் ஆம் நல்லதுதான் என்ன இருவரும் சுவாமிகளைக்கண்டு நீங்கள் இன்றுமுதல் எங்கள் உணவை உண்டு வாழ விரும்புகிறோம். என்ன அவர்களும் அதற்கிசைய அப்படியே நாள்தோறும் அநேக வருஷங்கள் தேவார பாடசாலையிலிருந்தே திருவமுது அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இடைஇடையே நடராஜஓதுவாமூர்த்திகள் சென்று இப்பாடலுக்கு உரை எழுதினால் நல்லது என்பார். அதை அன்போடு ஏற்று உரை சொல்லுவார். ஓதுவாமூர்த்தி எழுதிக்கொள்ளுவார். பிறகு வாங்கிச் சரிபார்த்துக் கொடுப்பார். இப்படி எழுதிய பல உரைகளில் "தோடுடைய செவியன்" என்னும் பாடல் உரையும் ஒன்று. இதனைச் சைவத் திருமுறையில் அன்புடையார்க்குப் பயன்படும்படி அச்சிட்டு உபகரிக்க விரும்பித் தருமபுர ஆதீனத்திருக்கூட்டத்தினருள் ஒருவராகிய திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமடம் ஸ்ரீமத் மௌனம் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களிடம் சமர்ப்பித்தேன். அன்பர்கள் உரை வெளியீட்டைப்பெற்றுப் படித்து இன்புற வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

சி. ப. தேவாரப்பாடசாலை ஆசிரியன், சிதம்பரம்.

சபாநாயகர் சந்நிதி ஓதுவார்

**ஆ. சு. இராமலிங்கன்.**

---

## மௌனகுரு வணக்கம்.

ஐந்துவகையாகின்றபூதமுதனாதமுமடங்கவெளியாகவெளிசெய்
தறிவாமையறிவாதிபிரிவாகவறிவார்க ளறிவாகநின்றநிலையிற்
சிந்தையறவில்லென்றுசும்மாவிருத்திமேற்சின்மயானந்தவெள்ளந்
தேக்கித்திளைத்துநானதுவாயிருக்கநீ செய்சித்ரமிகநன்றுகா
ணெ[illegible]நவடவாற்பரமகுருவாழ்கவாழவரு ளியநந்திமரபுவாழ்க
வென்றடியர்மனமகிழவேதாகமத்துணி பிரண்டிலையொன்றென்னவே
வந்தகுருவே வீறுசிவஞானசித்திநெறிமௌனோபதேசகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்மரபில்வருமௌனகுருவே.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம்.

## திருப்பிரமபுரம்.

பண்—நட்டபாடை

# குருவருள்.

தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (க)

இதன்பொருள்—எமதத்த! சிறியேற்கு இத்திருவருளீந்தார் ஈண்டுளராய இவரே. இலராயினாரல்லர். அற்றேல் அவர்தம் இயல்பென்னையோவெனின் வகுத்தோதுதும். அவர்தாம் திருச்செவிமுதலிய திருவங்கமுடையரன்றி அனங்கராயினாரல்லர். அல்லதூஉம், அறவடிவுடைய திருவிடையேறியோர்; அன்றி ஸ்ரீ சடையின்கண் பிறை யொன்று சூடியோர்; மேலும் திருவெண்ணீறு சண்ணித்துடையராயினார். இனி நுமதுளங்கொள்ளாமை போலாது எனதுளம் எனதாக வொட்டாது தனதாகக்கொண்டருளும் ஓர் தோன்றாப் பொருளன்றித் தோன்றும் பொருளல்லர். சொன்ன அன்னார் இத்திருப்பதியுள் எழுந்தருளிவைகும் பெருமானே (பிறாண்டு வைகும் பிறரல்லர்) எ-ம்.

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை" எனவும்

செவியான் வரும் செல்வம்—கேள்வியா னெல்லாம் பொருளையுமறிதல். எனவும்

"செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து" எனவும்

வருவனவற்றானும், இன்னோரன்ன பிறவாற்றானும் யா[illegible]மல்லாம் பொருள்களை அறிதற்கருவியாய இந்திரியம் ஐந்தனுள் அருவ இயல்பறியும் அறிவாற்ற லில்லாத ஏனை இந்திரியங்கள் ஒன்றினும் அஃதறிதலாற்றுங் கருவியாய் மேம்படுதலின் செவி இந்திரியம் சிறப்புடைத்தாதல் உயர்ந்தோர் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது.

இனி, எமதிறைவன்செயலெல்லாம் உலகச் செயலோடொக்கு மென்பதூஉம் அவ்வாறே அவர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது.

அதனானே எமது செவி ஏனைக்கருவிகளின் சிறப்புடைத்தாய் யாம் எல்லாப் பொருளையும் அறிதற் கேதுவாயவாறெவ்வாறு அவ்வாறே எமதிறைவன் திருக்கரணங்களுள் வைத்து அவன் திருச்செவி முறை குறை முதலியன வேண்டியார் வேண்டியவாறு வேண்டிக்கோடல் எல்லாம் ஏன்றுகோடற்கருவியாய் மேம்பட்டு நிற்றலின் சிறப்புடைத்தாதல் பெற்றாம்.

அற்றேல் "குணங்குறி யொன்றில்லான்" என்றித் தொடக்கத்து இன்னோரன்ன சுருதிகள் பலவேறுண்மையின் அவற்கு அவை ஏன்றுகோடற் கருவியாய திருச்செவி முதலிய திருக்கருவிகள் உளவென்றல் சாலாது போலுமெனின், அற்றன்று; இறைவனியல்பு உலகியலோடு ஒக்குமென மேலோதிப்போந்தனமாகலான் என்பது. இவற்றியல்பெல்லாம் ஈண்டுணரப்பிற் பெருகும்.

இஃது ஆயவாற்றான் வறியானொருவன் ஒரு பொருளுடையான் மாட்டுச்சென்று ஆண்டுத்தன் குறைதீர்த்துபகரித்தற்குரிய கருவியாய அவன் கரப்பெருமையே முதற்கண் எடுத்துக்கொண்டு, மாண்கை, நீண்கை, வண்கை, மழைக்கை யென்றித்தொடக்கத்தால் அதனைச்சிறப்பித்தோதிப், பின்னர்ப் பிறவற்றையும் எடுத்தோதுமாறு யாங்காண்டும். அவ்வாறே எமது பரமாசாரியப் பரம்பொருளும் தாம் ஈண்டெடுத்துக்கொண்டருளிய திருப்பா முறையின் முறையானே இறைவன் ஏன்றுகோடற் கருவியாய் மேம்பட்டு நிற்றலின் அப்பெற்றித்தாய அவன் திருச்செவியினை எழுவாய்க்கண் எடுத்துக்கொண்டருளி அதற்குரிய திருவணி விசேடம் பற்றி அதனைச்சிறப்பித்தருளித் 'தோடுடைய செவியன்' என இவ்வாறுபதேசித்தருளினார் என்பது.

இவ்வாற்றானே அத்திருப்பா இறைவன் திருவுளத்திற் சென்று தலைக்கூடுதற்குரிய நெறி அவன் திருச்செவியேயாம் ஆகலான் அஃது அம்முறையானே போந்து இறைவன் திருவுள்ளத்தோடியைந்து கிடந்ததென்பது.

அற்றேல், அஃதவ்வாறே எமது இறைவற்குரிய திருச்செவியன்று எமதிறைவிக்குரிய திருச்செவியேயாம். திருத்தோடு அவற்கன்றி அவட்கே உரிமையுடைத்தாகலான். ஆயவாற்றான் இஃதெமதிறைவன் திருவுளத்தாய தென்பதேலாது; இறைவனார் இறைவியார் திருச்செவி யிரண்டனுள் அத்தோட்டியையுடைமை பற்றி அஃதிறைவிக்குரிய திருச்செவியேயாய் முடிதலின் அத்திருப்பா பரமர்பாற் செல்லுதற்குரிய நெறிப்பேறியையுடைத்தன்மையின் பிராட்டியார்பாற் செல்வதற்குரிய நெறிப்பேறியை

புடைத்தாய் முடியும் போலும் எனின் முடியுமாயினும் அதுபற்றி ஆண்டு இழுக்கென்னை ?

“ வடிவம் பிறிதேல் மதியும் பிறிதாம்
உடனம் பிதைகசே ருடையா ளொருமைப்
படிவம் புருடப் பணிபெண் பணியென்
றிடுமிங் கிதிலே திசையு மிசையீர் ”

என்னும் திருமொழியுண்மையானென்பது. இதனை இன்னும், ஈண்டுரைத்தவாறுபற்றி விரித்துணர்ந்து கொள்க.

அஃதேல் அஃதஃதாமாயின் ஆசிரியர் ஆண்டு இறைவிதிருச்செவியை யொழிக இறைவன் திருச்செவியைப் பெய்க. அஃதங்ஙனமன்றி அம்முறைமாறிக் கோடலானாகும் பயன் விசேடம் என்னையெனில், அற்றேல் ஈண்டு நின்னை வினவுதும் “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என உபதேசித்தருளிய சிற்றம்மையார் அதனை "அத்தனுமம்மையுமுன்னறி தெய்வம்" என உபதேசித்தருளுக ; அம்முறை மாறிக்கோடலானாகும் பயன் விசேடம் என்னை? நீ அதற்கு ஆண்டு இறுக்கும் இறையே இதற்கு யாம் ஈண்டு இறுக்கும் இறையுமாம். ஆகலான் அது பற்றி ஆசங்கை யென்னையென்றொழிக. அற்றன்று அதுவும் யாம் ஆசங்கித்தற்குரியதோராசங்கையேயாகலின் அதனை ஆசங்கிக்குமுகத்தான் அஃது இதற்கு அமைதியாகாதாலெனில், அற்றேல் அதன் இயல்பு முன்னர்ச் சுருங்க எடுத்தோதுதும். அஃதேல் இஃதிவ்வாறே யாமும் இறைவனும் ஒத்துமாயின் இதுவும் அதுவும் ஒக்கும். அஃது அன்ன வன்றாகலான் இஃததற்கு அமைவாகாது போலும் எனில் அற்றன்று. இதுவும் அதுவாதல் இழுக்கன்றென்பது மேலோதி யொழிந்தன மாகலான் என்பது.

இனி ஈண்டுத் தோன்றும் குழவியெல்லாம் தம் முகம் கீழாய் இங்கிலமேல் நோக்கு முன்னர் யாது மறியாவாய் நோக்கியவாறே முன்னர் அன்னையை யறிந்தே பின்னர் அத்தனை யறிதலும் அவ்வாறே அவ்விருவரது உபகார விசேடங்களின் தாரதம்மியம் அது பற்றி அவை அவரை யென்று கோடன் முறையும் அம்முறையானே முற்பிற்பாடு படும்.

அஃதொப்பவே தாம் அழுதருளி ஆண்டெழுந்தருளிய இறைவன் இறைவி இருவருள்யாரையும் அடியார் போன்று நிம்ப இறைவியார் இறைவனார் திருவாணை மேற்கொண்டு சென்றருளிப் பிள்ளையார் திருப்புறம் தைவந்து திருக்கண்ணீர் துடைத்தருளுங்கால் முதற்கண் அவர் திருநோக்கெதிர்ப் பட்டருளினவர் இறைவியார். பின்னர் இறைவனார் அவர்க்கெதிர்ப்பட்டருளினர்

முற்பிற்பாடு பற்றிய அவ்வுபகார விசேடம்பற்றி எமது பரமாசாரியப்பரம்பொருள் இறைவி திருவணியமைந்த திருச்செவியை முறையானே எழுவாய்க்கண் எடுத்துக்கொண்டருளினாரென்பது.

இனி அதுவுமுளப்பட பிறிதோராற்றானும் ஓரமைதியாமாறு. எமதிறைவன் ஆதிக்கண் ஆக்கியருளிய முதனூலை அனந்தேசுராருக்கு உபதேசித்தருள, அவர் அவ்வாறே ஸ்ரீகண்டருத்திரருக்கும் அவரவ்வாறே அரி அயர்களுக்கும் அவரும் அவ்வாறே உரிய பிறர்க்கும் உபதேசிப்ப அவ்வாறே அவரவர் சுரோத்திரம் பற்றிக் கேட்டுக்கோடல் காரணத்தான் அந்நூல் சுருதி எனப்படும். அஃது இன்னும் அன்னபிற காரணங்களால் அன்னபிறவேறு பெயரும் பெறுமென்றோதுப.

இனி எல்லாவியல்பானும் வடமொழி தென்மொழி இரண்டும் தம்முள் ஒப்பனவாகலான் அவ்விரு வேறுமொழியினும் முதனூலும் பிறநூலும் உளவாகலும் தம்முளொக்குமாகலான் சிவபரம்பொருள் வடமொழியுள் ஆக்கியருளிய முதனூல் சுரோத்திரவியைபுடைமைபற்றிச் சுருதியெனப்பட்டவாறே எமது பரமாசாரிய பரம்பொருள் தாம் ஆக்கி அருளிய இப்பரமநூலும் அவ்வடமொழிச் சுருதியொப்பவே தென்மொழிச்சுருதியாம்.

அஃது இவ்வேதுபற்றி என்பது தேற்றியருளுவார் அத்திருச் செவியை முதற்கண் எடுத்துக்கொண்டருளினாரென்பது.

இஃது இவ்வாறாகலான் ஆசிரியர் மறைமுதலிய திருப்பெயர்கட்கு உரிய ஏது முதலியன முதற்கண் எடுத்துக் கொண்டருளாமையும் அறிக.

இருந்தவாற்றான் இந்நூல் தமிழ்மொழிச் சுருதியாதல் பெறப்பட்டது.

இனி அப்பரம் பொருள் இதுவென அளவைகளான் அறியவாராமையின், அது பற்றி "அவனென" பெரும் பெயரான் ஓதிக் கிடந்ததனை அண்மைப்படுத்து வைத்து அவனியல்புரைக்கின்ற [illegible]கலின், அதனை உத்தேசமுறை பற்றி உணர்த்துவார் "இவன்" என ஆசிரியர் எடுத்துக்கொண்டோதியருளினார். அதுகேட்டதா[illegible]யார் அவனைக்காணுதல்பெற்றிலர் ஆகலான், இலக்கிய உணர்ச்சி இலக்கண உணர்ச்சியை யின்றியமையாமையின் அம்முறை பற்றி உணர்த்துவான் புகுந்த ஆசிரியர் அங்கம் பற்றியே அங்கியுணர்த்துதல் முறையாகலானும், உணர்த்துமாறு வேறின்மையானும் "தோடுடையசெவியன்" என முதற்கண் அங்கமெடுத்துபதேசித்தருளினார்.

இன்னும் "அவளான் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்" என்பதனானும் அதற்கு ஈண்டு ஓதிப்போந்த வாழ்வெல்லாம் சிவசத்தி மணந்ததனாய வாழ்வு" என்பதனாலும் உயிர்கட்கு நிகழும் வாழ்வெல்லாம் எமதிறைவியாரியையுபற்றியேயாமென்றோதுப. ஓதவே எம திறைவியாருபகாரம் இல்வழி அது நிகழாது. அஃதுள் வழியே நிகழு மென்பது பெறப்பட்டது. படவே இவ்வுலக இருளோட்டுதற்கண் கதிர் கதிரோற்கு முற்பட்டு நின்றோட்டுமா றொப்பவே எமது அகவிருளை ஓட்டு தற்கண் இறைவியே இறைவற்கு முற்பட்டுநின்று ஓட்டுமென்பது பெற்றாம். அற்றேல், அதனாற் சத்தியே முதலாய் முடியும்போலுமெனின், அற்றேல், அஃது அவ்வாறே ஈண்டும் கதிரோன் அன்றிக் கதிரே முதலாய் முடிதல் வேண்டும். அஃது அன்னதுஅன்மையின் இதுவும் அன்னதன்றாம். ஆகலான் அஃது ஆசங்கை யன்மை யறிக.

இவ்வுலகக் குழவிகள் வாழும் வாழ்க்கைக்கு அவற்றைப் பெற்றாள் இபற்றுமுபகாரியாய் முற்பட்டுபகரிக்குமாறெவ்வாறு? அவ்வாறே ஏனைப் பேரின்ப வாழ்வுக்கு இறைவியா ருபகாரமே முற்பட் டுபகரித்தருளுமென் பது.

இனி, ஈண்டுக் காணப்படும் தோடு முதலிய அணிகலமெல்லாம் எவ்வாறு தம்மை ஆக்கும் ஒரு வினைமுதல் இல்வழி இல்வாய் அஃதுள்வழி உளவாவனவன்றி அவைதாம் இயல்பானே உள்ளனவல்ல. அவ்வாறே எம்மாற் காணப்படும் இவ்வுலகும் தன்னை ஆக்குமொரு கருத்தாவானுய தொரு காரியப் பொருளாமல்லது அஃதியாதும் இயற்கைப்பொருளாதல் செல்லாது என அங்ஙனம் உபதேசித்தருளுமுகத்தாற் காணப்படும் இவ் வுலகை ஆக்கும் வினைமுதலாய காணப்படாத கடவுளுளன் என்பது தேற்றி யருளுவார் "தோடு" என இங்ஙனம் அத்தோட்டினை முதற் கண் எடுத்துக்கொண்டருளினாரென்பதாம்.

ஆகவே இவ்வுலகம் ஒரு கருத்தாவை யுடைத்து; காரியப்பொரு ளாகலான் தோடுபோலு மென்னும் அநுமானம் பற்றியும் அஃதற்றேயாதல் தெற்றென அறிகவென உபதேசித்தருளியவாறாயிற்று. எனவே இவ் வுலகம் ஒருகருத்தாவாற் செய்யப்படும் ஒரு காரியப் பொருளாவதன்று. அஃது இயற்கையானுள்ளதொரு நித்தப்பொருளேயாம் என்னும் உலோ காயதர் மீமாஞ்சகர்களையும்; வித்தழியு மவ்வழிவுபாட்டின்கண் அங்குரம் தோன்றுமாறொப்ப அவ்வச் சார்ச்சிபற்றித் தானே தோன்றும் என்னும் சவுத்திராந்திகர் முதலியோரையும்; அது சூனி யத்திற்றானே தோன்றும் என்னும் மாத்துமிகர் முதலியோரையும்; அஃதுளதிலதாய்த் தானே தோன்றும் என்னும் சமணரையும்; அது செய்வான் செய்பொருளிரண்டும் ஒன்றாதல் இயல்பானுடைத் தென் னும் மாயாவாதிகளையும் மறுத்தருளி, தோடுமுதலிய அணிகலன்கள் எவ்வாறு செய்வானை யின்றித் தாமே செயப்படுபொருளாவனவல்ல; அவ் வாறே இவ்வுலகும் ஒரு செய்வானையின்றித் தானே செயப்படு பொருளா காமை மேலும், அவ்விரண்டும் தம்முள் ஒன்றாதல் யாதுமேலாமையின் அஃது இயற்கைப் பொருளாகாமைமேலும், அவ்விரு பொருளும் ஒரு

பொருளாதல் யாதுமேலாதென இவ்வாறு இவ்வுலகிற்கு முதற்கடவுளுண்மையும், அவை யிரண்டும் தம்முள் வேறாதலும் வலியுறுத்தருளிய வாறாயிற்று.

அற்றேல், அஃதவ்வாறே தத்தம் வினைமுதலாற் காரியப்படுதல் பொதுமையின் இவ்வுலகப்பொருளெவற்றிற்கும் ஒக்குமன்றே? அஃதங்ஙனமாக, அவற்றுள் இஃதொழித் தொழிந்ததொன்றனை ஈண்டெடுத்துக் காட்டினுமஃதமையும் அஃதற்றாகவும் ஈண்டிதனை மாத்திரையே யெடுத்துக்கொண்ட தெற்றுக்கெனின்? நன்றே ஓதினாய். அஃது ஈண்டோர் உவமையொடு படுத்துக்காட்டுதும். எமது பரமாசாரியப்பரம்பொருள் சிவபரம்பொருளையே முதற்பொருளாகக் கைக்கொண்டு வழிபடுதலுடைத்து என இவ்வாறு அத்தலைமைப்பொருள் இயல்பிது வென எடுத்தோதவே அப்பரமாசாரியப் பரம்பொருளை வழிபடும் தலைமையில் பொருளாய யாமும் அவ்வியல்புடையே மென்பது ஓதாமே யினிது விளங்குமன்றே? இதுவு மதுவாமாகலான்.

அஃதேல் அஃதஃதாமாயினும் சேதனாசேதனமென்னும் இருவேறு பொருளின் கூட்டத்தானாயது இவ்வுலகமென்றோதுப. அவற்றுள், சேதனப்பொருள் முன்னையதும் ஏனையது பின்னையது மாம். ஆகவே அவ்வமைதி ஈண்டைக்கமையாது போலும் எனின், அற்றன்று. சேதனப்பொருள் அசேதனப்பொருள் ஒப்பதொரு காரியப் பொருளன்மையா னென்பது.

அற்றேல், இவ்வுலகம் அவ்விருவேறு பொருளும் தம்முள் இயையும் அவ்வியைபே பிறிதன்றென்றோதுப ஆகலான் நீயிர் மேல் இவ்வுலகமெல்லாம் காரியப்பொருளா மென்றல் யாண்டும் செல்லாதாய் அதனுள் ஒருசார் இயைந்தும் ஒருசார் இயையாது மாய் முடியுமாகலான் அது மயில்நடமொப்ப தொன்றாய் ஒன்றை நிறுவும்வழி ஒன்றுவிட்டொழியுமாலோ வெனின், அற்றன்று; வான்வழியின் வந்திழியுங்கால் தூய்தாய நீர் பின்னர் உவர்நிலத்துப்புக்குழி அச்சார்ச்சிபற்றி அப்பெயர் ஒழிந்து உவர்நீர் எனப்பெயர் பெறுமாறு காண்டும் அவ்வாறே ஈண்டும் வைத்துக் கண்டுகோடு மாகலானென்பது.

அற்றேல், ஆண்டுப்புக்கதொழித்தொழிந்த நீர் அப்பெயர் பெறுமையின் அவ்வாறே அஃதீண்டும் கொள்ளப்படுமாலோ எனின்? அற்றன்று. ஒப்பெனப்படுவது ஒருபுடையொப்பே பிறிதன்மையானென்பது. ஆயவாற்றான் இவ்வுலகம் அவ்விருவேறு பொருளும் தம்முளியைந்து நின்றதோர் இயைபிற்றாமாயினும் அவற்றுள் சேதனப்பொருள் ஒருவாற்றாற் காரியப்பொருளாதலும் ஒருவாற்றாற் காரியப்பொருளாகாமையும், அவ்வாறன்றி அசேதனப்பொருள் எல்லாவற்றானும் காரியப்பொருளாதலுமாய வேறுபாடு தம்முட் சிறிதுடையவாமாகலானும், அக்காரியப்பாட்டின் மிகுதிப்பாடு அசேதனப் பொருட்கே யாகலானும் அதனான் அதுவே காரியப்பொருளும் அவை தம்முட் சிறந்த

பொருள் பொன்னும், அதனுனுரும் அணிகல மெவற்றினுஞ் சிறந்த அணிகலம் தோடுமே யாமாகலான் அஃதங்ஙனமாதல் அமைவுடைத்தாமாறு காண்க.

அற்றேல், அஃதங்ஙனமாம் ஆயினும் பொன் மணி இரண்டனுள் மணியே சிறப்புடைப்பொருள்போலு மெனின் அஃதொக்கும்; ஆயினும் அஃது அவ்வாறாதலும் இதன் பற்றுக் கோட்டையின்றித் தனித்தமையமாட்டாமையின் அது சாலுமாறு காண்க.

அஃதற்றும் ஆயினும், அணிகலங்களுள் வைத்து முடியணி சிறந்த தென்னுமோ வெனின், என்னும்; என்னை? அவ்வணிகலம் இரண்டனுள்காதணி முடியணியின்றித் தனித்துத் தன்னை அணிந்தாரை அழகு செய்ய வல்லும் ஆகலானும் ஏனையது அன்ன தன்றாகலானும் என்பது.

அஃதேல், அஃதங்ஙனமாக; இறைவன் திருத்தோடு இவ்வுலக அணியொப்பக் காரியப்பொருளாகாமையின் அஃதீண்டைக் கமையாதுபோலும் எனின், அற்றன்று; தோடு என்னும் அச்சத்தப்பொதுமை பற்றி இவ்வுலகத்தோடும் ஆண்டு தழுவப்பட்டு நிற்றலின் அத்தோட்டின் சாதி யென்பதே கருத்தாமாகலான் அஃதமையாமை யாண்டைய தென்றொழிக. இருந்தவாற்றான் எல்லாவற்றானும் இயைபுடைத்தாமாறு காண்க.

இஃதெமது பரமாசாரியப் பரம்பொருளின் றிருக்கருத்தாதல் "எப்பொருளுமாக்குவா னீசனே யெனு முணர்வும்" என்னது தெரிந்துணர்ந்து உபதேசித்தருளிய எமது ஆசிரியர் திருவாக்கானும் உணர்க.

அற்றேல் எப்பொருளுமாக்குவான் ஈசனே எனு முணர்வுமென அஃதாண்டு உணர்வுபற்றி உபதேசித்தருளுதலின் அஃதப்பரமாசாரியப் பரம்பொருளின் சீர் உணர்வுத்துணையேயாமல்லது உணர்த்தியருளும் திருப்பாவுள் அமையாதுபோலும் எனின், நின்னுணர்வு நல்லுணர்வே யாம் அற்றேல் ஆசிரியர் உணர்ச்சியும், உணர்ச்சிவழி நிகழும் திருப்பாவும் தம்முள் வேறுமே கொல்லோ? அற்றன்று. யாம் எவ்வாறு நினைகுதும் அவ்வாறு மொழிகுதும். அம்முறையும் இம்முறையோடொக்கும் ஆகலான் உணர்ச்சியுடையார் எவ்வாறுணருப அவ்வாறே யுணர்த்தியருளுப. ஆகலான் அஃது அதனுள் அமையாமை யாங்ஙனம் என்றொழிக.

அற்றேல், அஃதற்றும் ஆயினும் ஆசிரியர் அடையாளங்கள் சாற்றி என்புழி இதனையும் உடன்வைத்துபதேசித்தருளுப. அஃதாண்டின்மையின் இஃதீண்டைக்கு அமையாது போலும் எனின், அற்றன்று. எமதாசிரியர் "சிவனடியே" என்னும் திருப்பாவுள் பரமாசாரியப் பொருளின் உணர்ச்சி நிகழ்ச்சியாமாறும் "எப்பொருளுமாக்குவான் ஈசனே" யெனும் திருப்பாவுள் அவ்வுணர்ச்சிப் பயனுமாறும் உபதேசித் தருளினராகலான். உணர்ச்சிப் பயன்—உணர்ந்த வழியே விழுவா

தொழுகுதல். ஆகவே அவ்வறிவின் பயன் அதனுள் இடையரு
தெஞ்ஞான்றும் முதற்பொருள் சிவபரம்பொருளேயென ஒருதலை
யான் அறிவறிந்து கோடலென்பது பெற்றாம்.

அற்றேல், அப்பரமாசாரியப்பரம்பொருளும் யாமும்
பேரறிவு சிற்றறிவு பற்றி மேருவும் அணுவும் எனப்படும். ஆகவே,
அத்துணைச் சிற்றறிவுடையராய யாமும், முதற்பொருள் சிவபரம்
பொருளே யெனக்கோடும்; அஃதங்ஙனமாக அப்பேரறிவுப் பேறு
பற்றி ஆம்பயன் விசேடமின்றாம்போலுமெனின்? அற்றன்று.
எமது இம்மேற்கோளெல்லாம் அவ்வியல்பஃகியும் ஒருபுடை
யொத்து உண்மையொப்பத்தோன்றும் போலிமேற்கோளேயாம
ல்லது உண்மைமேற்கோளன்மையானென்பது.

அஃதேல், இஃதென்னை பாவம். நீயிர் இஃதிங்ஙன
மோதவே யாமெல்லாம் சிவநெறியுடையராகாது ஏனைப் புறநெறி
யுடையரெனவே முடியும்போலுமெனின், நன்றே ஓதினாய்;
அதுவே எங்கருத்துமாகலானென்பது.

அப்பரமாசாரியப் பரம்பொருள்மாட்டு நிகழும் பரமானு
பவ நிகழ்ச்சியும் சிவபரம்பொருள் ஆண்டாண்டு எழுந்தருளி வந்
தருளும் பரமகாருணிய நிகழ்ச்சியும் அன்னபிறவும் எம்பால் யாது
மின்மையின் அதுவே யெம்மியல் பெல்லாம் போலியாதற்கமையும்
சான்றாதல் அறிக.

அற்றேல் இஃது இங்ஙனமே யாமாயின் அஃதிங்ஙனமென
நீயிர் ஓதும் ஒத்தும் அதன் பயனும் போலியாமாலோவெனின்
அற்றேல், ஆசிரியர் நீலகண்டப் பெரும்பாணனார் தாம் அருமை
யுடைத் திருப்பதிகம் யாழினாற் பயிற்றும் பேறருளிச்செய்ய அது
கேட்டார் நீயிர் கெழுவு திருப்பதிகத்திற் கிளர்ந்த ஓசை அளவு
பெறக் கருவியினின் அமைத்தியற்று மதனானே அகிலமெல்லாம்
வளர இசை நிகழ்வதென விளம்புதலும் அதுகேட்டருளிய அவ்
வாசிரியர் அப்பரமாசாரியர் திருவடிகளை வணங்கி அளவில் திருப்
பதிக விசை அளவுபடாவகை இவர்களன்றியேயும் உலகினுளோருந்
தெரிந்து உண்மையறிந்துய்தற்பொருட்டு திருப்பதிகம் பாடியருளு
மாறு வேண்டிக்கொள்ள ஆண்டருளிச்செய்த எண்பெருகும் அப்
பதிகத்திசை நரம்பினிட, அஃது அடங்காமையின் அஃதொழிந்து
மெய்ப்பரிவும் பன்முறை இப்பெரியோரருளிச்செய்த திருப்பதிகத்
திசை யாழினேற்பேனென்னச் செப்பியது இக்கருவியை யான்
தொடுதலின்றோ எனத் தெளிந்து அதனை யுடைத்தொழிப்
பேன் என ஓங்குங்கால் பரமாசாரியப் பரம்பொருள்
ஆளுடையாருடனேகூடச்செய்யசடையா ரளித்த திருவருளின்
பெருமையெலாம் இக்கருவியின் அளவுபடுமோ? படாதாயினும் நம்
தம் இயல்புக்கேற்ப வையகத்தோர் அறிவுற இக்கருவி அளவை
யினியற்றல் வழக்காம் ஆகலான் இந்த யாழினைக்கொண்டே

இறைவர் திருப்பதிக இசை இதனினெய்த வந்தவாறே பாடி வாசிப்பீர் என ஆண்டு ஆற்றியருளிய சீராணையும் போலியாய் முடியுமன்றே. முடியாமையின் அவ்வாணை அப்பதிகப் பொருட்குமொக்கும். ஆகலான் எந்தமியல்புக்கேற்ப எமதறிவளவை பற்றியோதல் வழக்காதலும் அப்பரமாசாரியப்பரம்பொருளின் சீராணையேயா மாகலின் அஃதங்ஙனமாமாறு யாங்ஙனமென்றொழிக.

அல்லதூஉம் யாம் இந்நூற் பொருள் கேட்புழி அது கேட்பிப்போன் கேட்பிக்குமிவற்றையும் கேட்டுவைத்தும் எம்மனம் அவற்றில் பெரிதும் அழுந்தாதொழிதல் நோக்கி எம்மை நீயிர் மடவோருண் மடவோர் என்பீரன்றே இந் நூற்பொருள் யாதும் கேளாதாரன்றோ மடவோருண் மடவோர் ஆண்டுக்கேட்பிப்போன் அவ்வாறோதியது யாமும் அவ்வியல்புடையம் என்னும் கருத்தன்று. எம்மனம் புலன்வழிப்போகாது மடங்கி அக்கேட்கும் பொருளின் ஒருங்கி இனிதழுந்துமாறு அஃதழுந்துவிக்குமோர் உபாய நெறியே பிறிதன்றாம் ஆகலான் யாம் மேல் யாமெல்லாம் புறநெறி யுடையம் என்றோதியதும் அவ்வாறே யாமெனக்கொள்க.

இன்னும் நன்னெறி யெய்தும் தவமின்மைமேலும் இப்பொருள் கேட்கும் தவம் யாது மில்லாத புறநெறி யுடையர் போலாது ஒருவாற்றான் அவை யெல்லாம் ஒருங்குடையர் போன்றும் அதன்கண் எமதறிவழுந்தி புலநெறி யொழிந்து உய்யும் நன்னெறி நிலைபெறாது உழிதருமாறு நோக்கி அதனை நிலைபெறுத்து மோர் உபாயமே பிறிதன்றாமென்க.

அல்லதூஉம், யாம் ஈண்டோதுவனவெல்லாம் புதுவது படைத்துக்கொண் டோதினமல்லம்; உள்ளவாறுணர்ந்து உணர்ந்த வாறுபதேசித்தருளும் ஆசிரியன்மார் பேருபதேசப் பெரும்பொருளே யல்லது வேறன்மையின் அது போலியாகாமை தெரிந்துணர்ந்து கொள்க.

இன்னும், இஃதிவ்வாறோதும் யாம் இத்துணை ஓதவல்லவாற்றான் யாம் இஃதோதவல்லோம் எனப்பிறர்க்கோதுமாற்றான் தருக்குற்றுக் கெட்டொழிது மன்றே அஃதங்ஙனமாகாது அப்பரமாசாரியப்பரமபொருளின் திருவடியுள் அடங்கி நின்றுணரு முறையா னுணர்ந்துய்தற் பொருட்டு அஃது ஓதியதூஉமாமெனக் கொள்க. அது நிற்க.

இனி, அப்பொருள்தான் 'ஆளுடையானடியார்களெனு முணர்வும்" என்பது பயனுக்குப் பயனெனக் கொள்க. எனவே அபர அறிவின் பயன் எப்பொருளுமாகுவான் ஈசனே யெனு முணர்வும், பர அறிவின் பயன் அப்பொருடாளுடையானடியார்க ளெனு மறிவும், அவற்றிற்கேது இப்படியா லிதுவன்றித் தம்மியல்பு கொண்டியலும் துப்புரவில்லார் துணிவுகளாகச் சூழ்ந்தெழுதலும் ஆம் என உபதேசித்தருளியவாறாயிற்று.

இவ்வீசனே என்னும் அவ்வுணர்வு நிகழ்ச்சி இத்துணையரிய பெரிய சீரிதாகற் சிறப்பு நோக்கி யன்றே. எம்மை யாண்டருளிய மணிவாசகப் பரம்பொருள் எண்ணிறந்த பலவேறு பிழைப்புக்கள் எடுத்துக்காட்டியருளி "தெய்வமென்பதோர் சித்த முண்டாகி" யென உபதேசித்தருளியதூஉம் என்பது.

அற்றேல், அ∴தற்றாக, அப்பொருடான் ஆளுடையா னடியார்கள் எனுமறிவும் என்பதன் தாற்பரிய மென்னை யெனின்? அ∴து "அறிவறியான் றனையறிய வாக்கையாக்கி" என்னும் திருப்பாப்பொருள் பற்றி யறிந்து கொள்க.

ஒருவற்கு எப்பொருளுமாக்குவா னீசனே யென்னும் உணர்வு பரம்பரையான் நிகழவே பாச பசுக்களின் இருவேறியல் பும் உள்ளவாறுணரு மவ்வுணர்வு நிகழும். அது நிகழவே இறைவனது இருவேறியல்பும் உள்ளவாறுணரு மவ்வுணர்வு நிகழ்ந்து முற்றுப்பெறும். அது "சிவமூர்த்தி என்றெழுவார் சிந்தையுள்ளே யுற்றதோர் உலகமெல்லாங் காட்டுவான்" என்பது பற்றி யுணர்ந்து கொள்க.

இனி, இ∴தித்துணையி னெழிந்து பிறிதோராற்றானு ம∴தோதுதும். தோடு எனச்சிறப்புடைப் பொருளானுய சிறப்பணி எடுத்துபதேசித்தருளவே அவ்வுபலக்கணத்தானே பொருட் பிரபஞ்சமெல்லாம் அடங்கும்.

செவியெனச் சத்தமறி கருவி எடுத்தோதவே சத்தப் பிரபஞ்ச மெல்லாம் பெறப்படும். படவே அச்சிவபரம்பொருள் அவ்விருவேறு பிரபஞ்சங்கள் பற்றி நிகழும் ஐந்தொழில் புரியுமாறும் பெற்றாம். பெறவே, அவ்வைந்தொழில் புரியும் வினைமுதல் அவனொருவனே என்பது தேற்றியருளுவார் அவற்றை முதற்கண் எடுத்துக்கொண்டுபதேசித் தருளினர் என்பது.

இதனாற் போந்த பொருளாவது, ஒருவன் உடைப்பொருளும், அவற்றை நடாத்துமுறையும் முதற்கண் எடுத்துக்காட்டுமாற்றான் அவற்றையுடையான் மேம்பாடு காட்டற்பாற்று, என்னும் நியாயம் பற்றி உடைப்பொருளாய உலகமும், அவற்றைக் காரியப்படுத்துமாறும் காட்டியருளுமாற்றான் சிவபரம்பொருளின் மேம்பாடு தேற்றியருளுவார் அதுபற்றி அவற்றை முதற்கண் எடுத்துக் கொண்டருளினர் எனக்கொள்க. விரிப்பிற் பெருகும்.

இன்னுமோராற்றானும் அதுவிடுவிக்குமாறு, ஒருபொருளேயாயினும் தம்முள் இடையீடு சிறிதாய்த்தம்முள் ஒத்த இருவேறு பொருள்கள் ஒருபொருளேயாய்த் தம்முள் இயைந்து நிற்கும் ஓரியல்புடையது தோடு, அவ்வாறே இறைவன் ஒருபொருளேயாம் ஆயினும், குணகுணி வேறுபாட்டாற் சத்தி சிவமெனத் தம்முள் இருவேறுதிறப்பட்டுத் தம்முள் ஒத்து நின்று இவ்வுலகை நடாத்தியருளுமென்பது வேதாகமநூற்றுணிபு.

ஆயவாற்றான் அங்ஙனமாய அத்தன்மை இத்தன்மைத் தென்பது தேற்றியருளுவார் அதனை முதற்கண் எடுத்துக்கொண் டருளினாரென்பது.

அற்றேல், அவ்வியல்பு மூக்கணிக்கண்ணும் உண்மையின் ஆண்டு அதிவியாத்தியாமாலோவெனின், அற்றன்று. மூக்கணியாய்த் தம்முட் கூடுவனவாய இருவேறு பொருளும் தம்முள் இடையீடு பெரிதுடையனவாகலானும், காதணி யிரண்டினிடையீடு அவ்வாறன்றி அறச்சிறிது ஆகலானும் என்பது.

அல்லதூஉம், மூக்கணி பின்னையது பிறர்க்குப் புலனாகாது அதனகத்தே கரந்துடைமையின் அது பற்றி அது தன்னை யணிந் தாரை அழகு செய்யுமாறின்மையானும், அன்ன பிறவாற்றானு மென்பது. ஆகலான் அம்மூக்கணி பின்னையது முன்னையது நிற்றற்பற்றுக் கோடாதன் மாத்திரையே பிறிதன்றெனக் கொள்க. இனிக் காதணி பின்னையதும் அன்னதே போலும் என்னற்க. அஃது ஆண்டுத்தோன்றி விளங்காக்கால் அஃதணிந்தார தவ்வுடற் கூறு பெரிதும் அழகுபடுமாறு இன்மையானும், ஏனையதன்னது அன்மையானும், அன்ன பிறவாற்றானு மென்பது.

இதனாற் பெறப்பட்ட பொருளாவது, இறைவன் சத்திசிவமென இவ்வாறு இருவேறுதிறப்பட்டுத் தம்முள் இயைந்து நிற்கும் அவ்வியைபில் வழி உலகமெல்லாம் சடமொப்பச் செயலற் றொழியுமாகலான் அந்நிலை இவ்வுலகிற் கின்றியமையாது ஒருதலையான் வேண்டப்பட்டுடைமையின், அது பற்றி அதுவே பாசவீட் டிற்குரியதொரு விசேட நிலையாமாகலான் அச்சிறப்புப்பற்றி அப் பெற்றித்தாய அந்நிலை இப்பெற்றித் தாதல் காட்டியருளுதற்பொரு ட்டு அதனை முதற்கண் எடுத்துக்கொண்டருளினாரெனக் கொள்க. இதனை இன்னும் ஈண்டுவைத்தவாறு பற்றி விரித்துரைத்துக் கொள்க.

இன்னுமொரு வாற்றானஃதுரைக்குமாறு, அணிகலமே னையவெல்லாம் தோட்டணி அழகுசெய்யுமுகத்தால் தாமும் அழகு செய்யனவாம் ஆகலான் அவையெல்லாம் அத் தோட்டணியைப் பற்றியே தத்தம் தன்மைக்குரியவாவனவாம். அஃதொப்பவே உயிரெல்லாம் இறைவனியக்கம்பற்றியே இயங்குதற்குரியனவன்றி அவை தத்தம் சுதந்திர இயக்கம் உடையனவல்ல வாகலான் அவ் வியல்பு இவ்வியல்பிற்றென்பது உணர்த்தியருளுவார் அத்தோட் டினை முதற்கண் எடுத்துக்கொண்டருளினாரென்பது. இஃதிம் முறையாதல் அத்தோட்டணி யின்றி ஏனைய அணி அணியுங்கால் அவை அணிந்தாரைப்பெரிதும் அழகு செய்யாமை பற்றியும் அறிந்துகொள்க.

இதனுைடய பொருள் என்னை யெனின்? உயிர்ப்பொருள் உயிரில் பொருளெல்லாவற்றினும் இறைவுன் கலந்து நிற்குமாறு

பற்றியே அவை தம்தம் இயல்புக்குரியவாவன. அம் முறைமை ஏனை அணிகலன்கள்செய்யும் அழகுக்கெல்லாம் தோடு இன்றியமை யாதாகலான் இம்முறைமைக்குரிய அத்தோட்டணியை முதற்கண் எடுத்துக்கொண்டருளுமாற்றான் அஃது உணர்த்தியருளியவாறு மெனக்கொள்க.

இன்னும் இதனானே அத்துவித இயைபு இயைந்து கிடந்த வாறும் பிறவும் இவ்வாறே ஓர்ந்துணர்ந்துகொள்க.

இனி அப்பரம்பொருள் இதுவென அளவைகளான் அறிய வாராமையின், அது பற்றி "அவன்" எனப் பெரும்பெயரான் ஓதிக் கிடந்ததனை அண்மைப்படுத்து வைத்து அவனியல்புரைக்கின்று ராகலின், அதனை உபதேசமுறை பற்றி உணர்த்துவார் "இவன்" என ஆசிரியர் எடுத்துக்கொண்டோதியருளினார். அதுகேட்டதா தையார் அவனைக்காணுதல்பெற்றிலர் ஆகலான், இலக்கிய உணர்ச்சி இலக்கண உணர்ச்சியை யின்றியமையாமையின் அம்முறைபற்றி உணர்த்துவான் புகுந்த ஆசிரியர் அங்கம் பற்றியே அங்கி யுணர்த்துதல் முறையாகலானும், உணர்த்துமாறு வேறின்மை யானும் "தோடுடையசெவியன்" என முதற்கண் அங்கமெடுத் துபதேசித்தருளினார்.

அற்றேல், இன்னோரன்ன அங்கம் நம்மனோர் அங்கம் போறலின், அதுபற்றி அவனும் நம்மனோரின் ஒருவனும் போலு மென்னுங் கடாவை ஆசங்கித்துச் சொல்லொப்புமையான் அங்ஙன மாயினும், இது மருளங்கம், அஃது அருளங்கம் எனப்பொருளான் வேற்றுமையுளது. அது பற்றி யாம் அநீசரும் அவன் ஈசனுமா மென்பது உணரப்படுமாயினும், அவன் இறைமையியல்பு கண் கூட்டில்வைத்து விளக்குவார் "விடையேறி" என அதன்கீழ்வைத் துபதேசித்தருளினார். இறைமை ஒருவர் ஒருவர்க்கீயப் பெற்றுக் கோடல் உலகின்கட் கண்டாமன்றே? அற்றேல் அவர்க்குளதாய அவ்விறைமையும் அற்றும்போலும் என்னும் கடாவை ஆசங்கித்து வேண்டிப்பெற்ற செயற்கையான் வரும் இறைமைக்கு அஃதொக் கும். இறைவனிறைமை அன்னதன்றி இயற்கையானுளதொன்று என்பதுணரக்கிடக்குமாயினும் ஏனைத்தேவர் மாட்டில்லாத வீட்டுநெறியைத் தலைக்கூடுமறிவு அவன்கண் அன்றிப் பிறர் கண்இன்மையின் அதுபற்றியும் தெற்றென அறியப்படுமென்பார் "தூவெண்மதிசூடி" என அதன்பின் வைத்துபதேசித்தருளினார்.

அற்றேல், அஃதாக, யாம் அநீசத்துவத்துக் கேதுவாய மலமறைப்புடைய மாகலின் அதனை யறிதலு மெய்தலு மிலவா மாகலின் அதனான் எமக்காம் பயனென்னை என்னும் கடாவை ஆசங்கித்து அவையுமுள; அதனைக் சாதிக்குமாறுமுளது ஆயினும் இளங்குழவிநோய்க்குத் தாய் உண்டொழிக்கு மருந்து ஒப்ப

நமது மலநோய் தீர்க்கு மருந்து தன்கட்டானே செய்தருளும் இயல்பினரென்பார் "பொடிபூசி ,, என மறித்தெடுத்துபதேசித் தருளினர்.

அற்றேல், அவனுபகாரம் அத்தனையேயோ? பிறவும் உளவோ? இலவோ ? உளவாயின் என்னை? யென்னும் கடாவை ஆசங்கித்து அவை பலவேறும். அவற்றுள், எஞ்ஞான்றும் எம்மின் வேறாகாது எமதகத்தினின்றுணர்த்தி உபகரிக்கும் இயல்புடையனென அம்முதலுபகாரம் உணர்த்துவார், "என்னுள்ளங்கவர் கள்வன்" என மறுவலும் உபதேசித்தருளினர்.

அற்றேல், அவன் செய்யக்கடவன வேறில்லை போலும்; யாமும் செய்யக்கிடப்பன ஒன்று மின்று போலும் என்னும் கடாவை ஆசங்கித்து இருவர்க்கும் உளவாம். அவை சதாசிவ தத்துவத்தின் வைகும் இறைவன் யாமிங்ஙனம் வைகின் எம்மை ஆண்டை உயிர்கள் வழிபட்டுய்தல் ஒல்லாதென அவை எளிதின் வழிபட்டுய்தற் பொருட்டு இந்நிலவுலகின்கண் பலவேறு திருத்தளிகளுள்ளும் சிறந்த இத்திருத்தளியுள் எழுந்தருளி வைகுகின்றான். இங்ஙனம் இரங்கித் தாமே வந்தோரை நாமாய் வழிபட்டுய்ந்து கோடலே முறை யாகலான், அவனை வழிபடுமாற்றான் வழிபடுக. வழிபடாமையை யொழிக வென்பார் "பிரமாபுரமேவிய பெம்மான்" என முடிவின்கண் வைத்துபதேசித்தருளினர்.

இனி இதனுள் செவியென அங்கமெடுத்தோதவே ஏனைத்தச அங்கமும் கூறியவாறாயிற்று. அஃதாமாறுகாட்டுதும். பெம்மான் என்பதனால் திருநாமமும், பிரமபுரமென்பதனால் திருப்பதியும் திருநாடும், விடையேறி யென்பதனால் கொடியும் ஊர்தியும், பொடிபூசி என்பதனால் முரசும் படையும், மதிசூடி என்பதனால் மலையும் ஆறும், தோட்டுச்செவியன் என்பதனால் தாரும் ஆகிய அங்கம் பத்தும் பெறப்பட்டன. படவே ஆசிரியர் தம்மை இறைவன் ஆண்டடிமைகொண்ட முறையுமுரைத்தவாறாயிற்று.

இனிச் செவியன் என அங்காங்கி கூறவே அஃதெடுத்துக் கோடற்கு மூலமாய ஐந்தொழிற்குரிய வினைமுதல் அவனே என்பதூஉம் பெறப்படும். விடையேறி என்பதனால், தம்மியல்பு தாமே யாய்ந்தெய்தியோர்க்கு அவ்வாறு அருளுமியல்பினன் என்பதூஉம், மதிசூடி என்பதனால் அது பிறருணர்த்த உணர்ந்தெய்தியோர்க்கு அங்ஙனமருளுமியல்பினனென்பதூஉம் போதரும். பொடிபூசி என்பதனால் அவன் ஏகன் என்னும் சுருதியை வலியுறுத்தவாறு. என்னுள்ளங்கவர்கள்வன் என்பதனால் சார்ந்தாரைத் தானாகச்செய்து பிறர் தங்கள் வினை தான்கெடுக்குமாறு கொள்ளக்கிடந்தது. ஆகவே ஐந்தொழில் செய்யும் அம் முதல்வன் சிட்டபரிபாலனமும், துட்டநிக்கிரகமும் செய்யுமுகத்

தானும், அன்னபிறவாற்றானும் சிறுவாழ்வுபெறுமாறு செய்து, அது வாயிலாகப் பெருவாழ்வு பெற்றுப் பிறவிப்பயன் முற்றுமாறு செய்தருளும் பெருங்கருணையுடைய பெரும்பெயர்க் கடவுள் அவனே என்பதூஉம் தெளியப்பட்டது.

இனிச் செவியன், விடையேறி, மதிசூடி என்பனவற்றான் உருவத்திருமேனியும், பொடிபூசி, பிரமாபுர மேவிய பெம்மான் என்பவற்றால் அருவுருவத்திருமேனியும், என்னுள்ளங் கவர் கள்வன் என்பதனால் அருவத்திருமேனியும் கொள்ளப்படும். அற்றாகலினன்றே ஸ்ரீ தமிழ்மகாபுராண முடையார் அடையாளங்களுடன் சாற்றி என்றெடுத்து உபதேசித்தருளியதூஉம் என்பது. அடையாளம் இலக்கணம். ஈண்டோதப்பட்டன தடத்த வடிவங்களாமாகலின், அது முதல்வன் பொது இலக்கணமெனக் கொள்ளப்படும். அற்றேல், எமதாசிரியர் பொதுச்சிறப்பெனக் கிளந்தோதாமையின் அவர்தம் ஆசிரியர் இலக்கணமிரண்டு முரைத்தனர் என்றுறப்படும் இழுக்கு என்னையெனின், அற்றன்று. ஏனைச்சிறப்பியல்பு வாக்கு மனோதீத கோசரமாமாகலானும், மனத்தின்வழி வந்த வாக்கா னோதிக், காயத்துட்பட்ட திருவிரலாற் சுட்டப்பட்டு இறைவன் ஆண்டுத் தோன்றி நிற்றலானும், திருவிடைமேற் போந்து பெரிய பிராட்டியாரோடு தம்மையுணர்த்தித் திருமுலைப்பாலூட்டத் திருவாயிற் பெற்றுக்கோடலானும், பெருந்தோணிபோய் மேவியாரைக் கண்ட கண்ணுடையராய் அதன்வழிச் சென்ற கருத்தோடு ஆண்டுச் சேறலானும், அன்ன பிறவாற்றானுமென்பது.

அற்றேல், இன்னவற்குரிய இலக்கண மிரண்டனுள், ஒன்றனை எடுத்தோதி, ஒன்றனை ஓதாதொழிதல் குன்றக்கூறலாய் முடியும்போலுமெனின் முடியாது. பொது இலக்கணம் இத்திருப்பா வொன்றினமையாது முன்னெழுந் திருப்பாக்கடோறும் மறித்துமறித் தெடுத்தோதுதலானும், அதுவும் அவற்றுட் பெறப்படுமாகலான் அஃதத்திருப்பா வொன்றினமையாமை ஏனைத் திருப்பா மூன்றினியல்பும் முன்னர்த் தனித்தனி வகுத்தோதுமாசிரியர் "செம்மைபெற எடுத்த திருத்தோடுடைய செவியனெனு, மெய்ம்மையொழித் திருப்பதிகம் பிரமபுரமேவினர், தம்மையடையாளங்களுடன்சாற்றி" என மேலெழுமத்திருப்பா வேழினும் அஃதுளதாமாறுவைத்துரைத்தருளிய வாற்றானறிக. அற்றேல், அடையாளங்களெனப்பன்மை வாசகத்தான் ஓதுதலின் ஒன்றெனல் பொருந்தாதாம் பிறவெனின், பொதுச் சிறப்பென்னும் இலக்கணங்களிரண்டின்கண்ணும் தனித்தனி அகப்பாகுபாடு பல வேறுண்மையின் பொருந்தாமை யாண்டைய தென்றொழிக.

இனி இஃதிங்ஙன முரைக்கு முகத்தான் அதுவும் உரைத்தருளினாரெனக் கோடலுமொன்று. அஃதாமாறு காட்டுதும். "தோடுடைய செவியன்" என்பதனால் = பேரருளுடைமையும், (தூய வுடம்பினனாதலு மீண்டேயடங்கும்) "விடையேறி" என்ப

தனால் = தன்வயமுடைமையும், "மதிசூடி" என்பதனால் முற்றுணர்வுடைமையும், "பொடிபூசி" என்பதனால் = வரம்பிலின்பமுடைமையும், "உள்ளங் கவர்கள்வன்" என்பதனால் = இயல்பாகவே பாசங்களினீங்குதலும் (இயற்கை யுணர்வினனாதலும் ஈண்டே யடங்கும்) "பிரமாபுரமேவிய பெம்மான்" என்பதனால் = அளவிலாற்றலுடைமையும் பெறப்படும். இவை சத்துச்சித்தாய இறைவனது சிறப்பியல்பாமாறு ஓர்ந்துணர்ந்து கொள்க. உள்ளுறைப் பொருணிலையியல், என்னும் பெருநூலியல்பு இதுபற்றி யுணரக்கிடந்தவாறு மறிக.

இனிச் செவி, விடை, மதி, பொடி என்பனவற்றை இயற்பெயரானோதாராயினார். அவை செயல்பற்றி வந்தன வென்பதுணர்த்தற்பொருட்டு. ஓர்மதி – மதியின் கலைகளுள் வைத்து ஓர் கலை என்றவாறு. தூய்மை வெண்மைகள் முறையே அகம் புறங்களின் விசேட வியல்புணர்த்தி நின்றன. சுடலைக்காடென வேண்டாது கூறினார், அவர்க்கு அஃது இயல்பன்மை யுணர்த்தற்பொருட்டு. உள்ளம் என்றது ஈண்டுயிருணர்வை. மலரோன் – பிரமன். அது பிரமா வென முன் வருதலின் அக்குறிப்பானே கமல மலரை யுணர்த்தி நின்றது. அரியுந்தி மலரென்பது தோன்ற மலரானென எடுத்த லோசையான் வைத்தோதினார். "விரைக் கமலத்தோன் மாலும் ஏவலான் மேவினோர்கள், புரைத்ததிகார சத்தி புண்ணிய நண்ணலாலே" என்பதூஉம் ஈண்டு உய்த்துணர்ந்துகொள்ளப்படும். எல்லாமலரும் ஏடுடைய வாயினும் அவையதனைத்தாமுள்ள துணையுமுடையனவாகாது இடையே இழந்தொழிவனவாம். இஃதன்ன தன்றென் றுணர்த்துதற்கு இயற்கையடைபுணர்த்தோதினார்

இனி மலரால் அருச்சித்து என்றுரைப்பினு மமையும். காயத்தின் றொழில், வாக்கின் றொழில்கள் கூறவே ஏனை மனத்தின் றொழிலுமுடன் கொள்ளப்படும். ஒரோவொன்றேயுடைய ஏனைத் தலங்கள் போலாது குரு லிங்க சங்கமம் மூன்றும் தன்கண் உடைமை முதலிய பீடு ஒருதிறப்படாது பலவேறுதிறப்படுதலின் அவையெல்லாம் அடங்க ஒன்றனை விதவாது பொதுமையிற் பீடுடைய என்றார். இனி, அருள் செய்த பீடு எனினும் அமையும்; இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. மேவிய என வேண்டாது கூறினார், பிறாண்டு வைகுமாறு போலாது ஈண்டு மிக்கு வைகு மென்பதுணர்த்தற்பொருட்டு. மேற்போந்தபெ[illegible]மை யனைத்தும் ஒருங்குடைய பெரும் பெயர்க்கடவுள் என்பது தோன்றப் பெருமானென்றார். இனிப் பிரமபுரமேவுதலிற் பெம்மான் எனினுமமையும். மே—விருப்பம். பெம் – என்பதும் அது. தோணிபுரம் வேணுபுரம் முதலிய பெயரானோதாது இப்பெயரான் ஓதினார் இதுபோலவை ஆன்மாக்கள் மாசொழித்தற்குரிய நித்திய நைமித்திகஞ் செய்தற்கேற்ற உறுப்புடைத்தாமாறு செய்யப்[illegible]மையானும், செய்தற்கேதுவாகாமையானும் செய்வாரின்மையானும்.

இனி, பிரமபுரமென்பது தகராகாசமெனக்கொண்டு ஈரிடமும் அடங்குமாறு பொதுமையிற் பிரமாபுரமேவிய என்றோதியருளினாரெனினுமமையும். முனை என்பது இடைகுறைந்து நின்றது. அற்றேல் மிக்கு மேவுதற்கு ஏது என்னையெனின் "குருவுருவாயிருந்துவிதி கொடுப்பானுங் கொடுத்தவிதி கொண்டு போற்றத், தருவுருவா யெழுந்தசிவ லிங்கபரம் பரனுமுளந் தடுத்தாட்கொள்ள, அருவுருவாய் வந்தவொரு சங்கமனு மோரிடத்தில் வைகக் கண்டும், பெருநிலமே லீதறியார் விளக்கிருக்கத் தீக்குழலும் பித்தராமால்" என்றோதுதலின் அதுவே அதற்கேதுவெனக் கொள்க. அன்றேல், அஃதாக, குருவுருவாயிருந்தருளுதலும், இருந்து கொடுத்தருளிய விதியும் என்னை யெனின்? திருத்தோணிமேல் வைகி அருளும் பெருமானும், அங்ஙனம் வைகியருளித் தமிழ்வேதாகமங்களைக் கோவைப்படச்செய்து அதனை ஆளுடை பிள்ளையாரென்னும் குருபரம்பரையின் வைத்தலும், என்னுமிவையே யென்க. அற்றாகலினன்றே பிரமதீர்த்தத்தீரத்து அருளிய துணையின்மையாது தோணி வடிவாய பிரணவமெனப்படும் பீடமேலெழுந்தருளி வைகி அதன் காரியமா அவை. கோவைப் பட்டுக் குருபரம்பரை யாதற்கு மூலமாய ஆசிரியர்க்கு முற்றருள் செய்யப் பெற்றதூஉம் என்பது.

இனி, இத் திருப்பாவை ஓது முறையானோதுவோர் வீடெய்துதல் ஒருதலை. அது "செம்மை பெற" என ஆசிரியர் தாமே எடுத்தோது மாற்றானுணரப்படும். செம்மை — சிவபரம் பொருள். அது, "செம்பொருள் கண்டார்" என்புழி உத்தர வேத உரையோத்துடையார் உரைத்தருளியவாற்றான் உணரப் படும். இனி, செம்பொருள், இலக்கணைப் பொருள், குறிப்புப் பொருள் என்னும் மூன்றனுள், செம்பொருளென்றலும் ஒன்று.

அற்றேல், பிரமபுரமேவினார் தம்மை அடையாளங்களுடன் சாற்றி யெம்மையிது செய்து வைத்தாரிவரெனச்சாற்றி நின்றாரென ஆசிரியர் இறுவாயின் வைத்துப்பொருள் உரைத்ததனை எழுவாயினெடுத்துக்கொண்டு உரைத்ததென்னை யெனின்? இலக்கணம் பற்றியே இலக்கியத்தது உண்மை பெறப்படும் என்னும் முறையுணர்த்தற்கு ஆசிரியர் அங்ஙனம்உரைத்தருளினார். அங்ஙனமாயினும், உத்தேசமுரைத்து இலக்கண முரைக்கற்பாற்று என்னு முறைபற்றி யதனை யிங்ஙனம் கொண்டுரைப்பதே ஆசிரியர் கருத்தென்பது நுண்ணுணர்வாளுேக்கி யுணர்ந்து கொள்க.

அற்றேல் ஆண்டுச் செம்மைபெற வென்றது, தமது ஆசிரியர் பெறக்கிடந்ததனையே எமதாசிரியர் எடுத்து உரைத்தாரெனின், அற்றன்று. "இம்மாநிலத்தோர்க்குரை சிறப்ப" என மேலெடுத் தோதியருளுதலின், அது பிறர்க்குரிய பயனே பிறிதன்

ருகலின். உரை — ஓத்து. சிறப்பு — மிகுதி; ஓதல் — மிக்குப்
பெருக வென்றவாறு. இனி, பொருண் மேம்பாடு பொருந்தவென்
றுரைப்பினுமமையும். அற்றேல் மேல் செம்மைபெற வென்றொ
ழியாது மாநிலத்தோர்க்குரை சிறப்ப வென மறித்தெடுத்தோதி
யது புனருத்தியாய் முடியும் போலு மெனின் முடியாது; சிறப்புப்
பொது வென்னு முறை பற்றி யோதியருளினராகலின். ஈண்டேற்
புழிக் கோடலான் இம்மாநிலம் என்றது, தமிழ் உலகத்தின் மே
னின்றது. அற்றேல் செல்வக்கடவுட்டொண்டர்கள் பகை நட்
பின்றிப்பல்லுயிரும் ஒப்பப்பார்க்கும் பண்பினர் என்பதனோடு
இது முரணும்போலு மென்னுங் கடாவை விடுத்தற்கு இம்மா
நிலத்தோர்க்கன்றி வேறெந்நிலத்தோர்க்கும் அவ்வவர் தகுதிக்
கேற்ப வைத்து உபகரிக்கும் இயல்புடைத்தென்பார் பல்லுயிருங்
களிகூர என அதனை எடுத்துக்கொண்டு அடுக்கவைத்துபதேசித்
தருளினர். அற்றேலஃதங்ஙனமாக; ஓத்தென்பது ரூடிபற்றி வேத
மொன்றற்கே யுரிய திருப்பெயர். அற்றேல் இது அப்பெற்றித்
தாய மறை என்றற்குப் பிரமாணம் என்னை யெனின்? எழுது
மறை என்னும் ஆசிரியர் ஆப்தவாக்கியமே பிரமாணமாமென்பது.
அற்றேல் மறை யென்றொழியாது எழுதுமறையெனப் பிறிதி
னியைபு நீக்குதலின் அவ்வெழுதா மறையு மொன்றுளதாம் போலு
மெனின்? நன்றே வினயினய், அதுவே எமது கருத்தும் ஆக
லான். அற்றேல் அதற்காதார மென்னையோ வெனின்? எல்லை
யிலாமறை யென ஆசிரியர் மேல் எடுத்துக்கொண்டு ஓதுமதுவே
ஆதாரமாகலான் என்பது. எல்லையின்மை — எழுதிக்கோடற்கே
லாமை. எழுதிக்கோடற் கேற்புடையது வரையறையுட்பட்டு
நிற்றலின் அதனின் வேறாயது அதனுட்படாதாயிற்று. எழுது
மறை என முன்னெடுத்துரைக்குமாற்றான் அஃதப்பொருட்டாம்.
ஆயினும், பொதுமையின் வைத்தோதுதலின் பலவேறு திறம்
பற்றி அதன்கண் நிகழும் அதனியல்பெல்லாம் கொள்ளப்படும்.
அற்றேலஃதங்ஙனமாக; ஆசிரியர் வடமொழி தென்மொழி என
விதவாது மறை என்பதனானும் எழுதுமறை என அதனையுமவ்
வாறு வைத்தோதுதலானும், மேல் விதவா தோதினும் மறை
என்புற துணையே வண் மொழியெனக் கோடலின் எழுது மறை
யென்றதும் அம் மொழியின் எழுதுமறையினையேயாம்பிற
வெனின், அற்றன்று; எழுதுமறை என்ற துணையின் அ[illegible]
மறித்தும் “ தமிழான் ” என அடுக்க வைத்தோத[illegible]ான் என்பது.
அற்றேல், ஆசிரியர் எழுதும் தமிழ்மறை [illegible] அதனை ஒருங்கு
வைத்தோதாமை எற்றுக்கெனின், அங்ஙனம் [illegible] எழுதாத்
தமிழ்ம்மறை ஒன்று உளவென்னவும் படுமன்றே! அஃதொன்றின்
மையின் பொதுமையின் எழுதுமறை என்றோதி அங்ஙனம் நிக
ழும் ஐயமறுத்தற்கு “ மல்லல்நெடுந்தமிழால் ” [illegible] அதனை
அடுக்கவைத்துபதேசித்தருளினர்.

தனித்தனி அறம் பொருள் இன்பம் என்னும் சிறுபயன் பயக்கும் சிறுபாக்கள் போலாது இருவேறு பெரும்பயனும் ஒருங்கு பயக்கும் பெரும் பேரியல்புடைத்தென்பார், ஈரடை புணர்த்தோதியருளினார். மல்லல் – பாவியல்பு, சொல்லியல்பு, பொருளியல்பு முதலியவற்றான் நிகழுமோர் செல்வ விசேடம். நெடுமை – அதன்மேம்பாடு. ஆகவே, பாசவீடு, சிவப்பேறு என்னு மிருவகைப் பயனும் தப்பாது பயக்கும் இயல்புடைத்தென்பதாம். இனி, புத்தி, முத்தி, என்னு மிரண்டனையும் பயப்பதூஉமாம்.

அற்றேல் அஃதாக, இவ்வாற்றான் இது மறை எனப்படுமாயின், மறை தம் முதலையின்றி யமைந்து நில்லாது. அற்றேல், அதற்கு இறை என்னையோ வெனின்? “மறைமுதன் மெய்யுடன் எடுத்த” என்னுமதுவே அதற்கிறை யெனக்கோடற்பாற்று. அற்றேல், அஃது வடமொழியுள் நான்முகத்து வேறாகத் தனித்து நின்றொலிக்குமாறுபோல் ஈண்டுக் கண்டிலமாலெனின், அம்மொழி முறைக்கு அஃது அன்னதாம். இம்மொழி முறைக்கு மெய்யொடு புணர்ந்து இஃதின்னதாம் என்க.

அற்றேலஃதாக, முதன்மை எனப் பாடங்கோடலும் உளதாலோ வெனின், மெய்யெனப் பாடமுண்மையானும், அது மெய்யோடியைந்து நிற்றலானும் முதன்மையென இடுக்குறப் புகுத்தி இடர்ப்பட்டுரைத்தல் எற்றுக்கென்றொழிக. அற்றேல் ஈண்டோதியன வெல்லாம் ஒக்கும். இனி எற்குத் தடையொன்றே யுளது, அதற்கு இறை என்னை யெனின், கூறுதும். யாம் ஈண்டிதனை மறை யெனக் கோடுமெனின், மறையாவது – முதனூல். அதற்கு வினைமுதல், வினையினீங்கி விளங்கிய வறிவின் முதல்வன். என்பவாகலான், அஃதீண்டுச் செல்லாதாம் பிறவெனின்; அவன் அருள்வழிப்பட்டோரும் அதற்குரியரென்பதும் ஆண்டே கூறிக்கிடத்தலின், செல்லாமை யாண்டையது என்றொழிக.

இனி, இத்திருப்பா தோடு முதலிய திருமொழிகள் முப்பத்தாறான் வைத்தோதவே அவ்வாறே இதனுள்ளும் முப்பத்தாறு தத்துவ சொரூபமும், அவற்றின் தோற்றமும், அவை கருவியாமாறும், கூறப்பட்டன எனவும், அவற்றுள், முதற்றிருவடியுள் திருமொழி பத்து மாத்திரம் வைத்தோதவே இத்திருமுறைகளின் அகப்பாகுபாடுகள் எண்ணுமுறையால் தனித்தனி பத்தடையுவாம் எனவும், ஏனைத் திருவடிகள் மூன்றும் அங்ஙனமாகாது ஒன்றும் ஒன்றும் இரண்டுமாக நான்கு திருமொழிகள் குறைத்து வைத்தோதவே இதனுள் வைத்தாக்கப்பட்ட திருப்பதிகம், திருப்பா, திருவடி, திருமொழி, என்னும் நாற்றரமும் முற்காலத்திற் பிற்காலம் குறைவுபட்டொழிவன எனவும், செவியன் முதலிய திருப்பெயர்களானும் சினை முதலியவற்றாற் பிறந்த

பெயர்களாக வைத்தோதி முடிவின் கண் இவனெனச் சுட்டுப் பெயரான் வைத்தோதவே அவ்வாறு இதனுள் தனித்தனி அறுவேறு திறப்பட்ட சமயங்களது இழிபும், அவற்றின் அதீதமாய் மேம்பட்ட சித்தாந்த சைவத்தின் உயர்வும், அதனியல்பும் ஓதப் பட்டனவெனவும், அல்லதூஉம் அச்சமயக்கடவுளரெவரினும் முழுமுதல் சிவபரம் பொருள் என வைத்தோதப்பட்டதெனவும், இனி இத்திருப்பா திருவடி நான்கு உடைத்தாக வைத்தோதவே இதனுள்ளும் சரியை முதலிய நாற்பாத இயல்பும், அவற்றின் பயனாகிய சாலோகமுதலியனவும் ஓதப்பட்டன எனவும், அல்லதூஉம் நாற்பொருட்பயன் ஓதப்பட்டதெனவும், இனி திருவடி நான்கினும் தனித்தனி ஐவேறு சீர்வைத்தோதவே ஈண்டும் தனித்தனி ஐவேறூய திருவைந்தெழுத்து, ஐவேறு காரணக் கடவுளர், ஐந்தொழில், ஐம்மலம் என்பவற்றியல்பு வைத்தோதப்பட்டதெனவும், அவற்றுள் முதற்சீர் மூவசைபற்றிக் கூறவே ஈண்டும் முப்பொருளியல்பு கூறப்பட்டதெனவும், அல்லதூஉம், அதம மத்திம மகாப்பிரளயங்களின் இயல்புரைக்கப்பட்டதெனவும், இனி, தோடு என இறைவிக்குரிய அணியெடுத்தோதவே ஈண்டும் சிவசத்தியின் சொரூபம் கூறப்பட்டதெனவும், செவியன் முதலியவற்றுள் ஆக்கல் நீக்கல்கள்பட வைத்தோதாது இருப்புக்கூறவே ஈண்டும் உயிர்க்குப்போக நுகர்ச்சி யாமாறுணர்த்தப்பட்ட தெனவும், செவியன் என அங்கம எடுத்தோதவே, புவனேசுவரர்சொரூபம் கூறப்பட்டதெனவும், பிரமாபுரம் என புவனசத்தம் எடுத்தோதவே ஈண்டும் புவனசொரூபமும், அவற்றின் அளவையும், கூறப்பட்டதெனவும், தனித்தனி நான்கு திருவடியும் பதினெட்டெழுத்தான் வைத்தோதவே இதனுள்ளும் பதினெண்வித்தைகளினியல்புகளெல்லாம் ஓதப்பட்டன எனவும், தோடு எனச் செய்கை கூறவே ஈண்டும் இயைபுபற்றி ஆண்டாண்டு முப்பொருளினியல்பு கூறப்பட்டதெனவும், ஏறி, ஆடி, பூசி, என அவையும் பெயரான் வைத்தோதவே ஈண்டும் இறைவற்கு இடையே வந்தியைந்ததாய பொதுவியல் போதப்பட்டதெனவும், அவற்றி னடுக்கக் கள்வன் எனத் தொழிற் பெயரான் வைத்தோதவே அது ஐந்தொழில் பற்றிக் கொண்டனவாமென்னும் முறை கூறப்பட்ட தெனவும், பெருமான் எனக் குணம்பற்றிக் கூறவே ஈண்டும் இறைவனது எண்குணவியல்பு ஓதப்பட்டதெனவும், இவனன்றே என்னும் மொழி மூன்றனுள் இரண்டொழித்தொழிந்து நின்ற ஒன்று மாத்திரம் பயனுடைத்தாக வைத்தோதவே இதனுள்ளும் பசுபாச அறிவின் மேற்பட்ட பதியறிவொன்றே பயனுடைத்தாமாறு ஓதப்பட்டதெனவும், இனி செவிய ன்முதலிய ஆறனுேடும் தோடு, விடை, மதி, பொடி, முதலிய அடை புணர்த்தோதவே இறைவன் செய்யும் எத்தொழிலும் இறைவியோடியைந்து நின்று செய்யுமாறு கூறப்பட்டதெனவும், இவன் என்பதனை அங்ஙனம் அடைபுணர்த்தாது தனித்து வைத்

தோதவே, இறைவன் யாதினும் விரவாது நிற்றற்குரிய தனிநிலை யாமாறு கூறப்பட்டதெனவும், செவியன் முதலிய ஆறும் ஒருவாறு ஆண்டாண்டு முடிந்தும் இயைபு பற்றி மறித்தெழுந்து சென்று நிற்ப, இவனென்பது அவ்வாறொன்றினை அவாவாது நின்று முடியவே ஈண்டும் மறித்து மறித்து எழுதரும் பதமுத்தி பலவோடு முடிவாகிய சாயுச்சிய முத்தியும் கூறப்பட்டதெனவும், தோடு என மாதரணியும், விடை முதலிய அஃறிணைப்பெயரும், செவியன் முதலிய உயர்திணைப்பெயரும், வைத்தோதவே, ஈண்டும் அவனவளது என்னும் பிரபஞ்சமாய் அவன் நிற்கும் இயல்போதப்பட்டதெனவும், பணிந்தேத்த அருள்செய்த என வைத்தோதவே, ஈண்டும் சாதனமும் பயனும் கூறப்பட்டதெனவும் குறிப்பாற்றெளியப்படும். இன்னோரன்ன பிறவும் இவ்வாறு ஓர்ந்துணர்ந்து கொள்க. இதனானே இஃது பாடியம் போலும் ஆகமப்பொருளோடொற்றுமை யுடைத்தாய வேதமாமாறும் காண்க. அற்றுகலினன்றே தமிழ் மகா புராண முடையார் "எழுதுமறை மல்லல் நெடுந்தமிழால்" என வேத வெடுத்தோதாது வாளாவோதியொழிந்ததூஉம் என்பது.

இங்ஙனம் ஆசிரியர் குறிப்பு இஃதென்றறிந்து இப்பொருள் காணமாட்டாதார் சுரோத்திரம்போற் பரியாயப் பெயராய செவியை முதலெடுத்துக் கோடலின் அது பற்றி இது சுருதியாயிற்று என மனம் போனவாறெல்லாம் கூறிக்களிப்பர். ஆசிரியர் கருத்து அதுவாயின், "தம்பாடல் பரமர்பாற் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து" எனக் கிளந்தெடுத்து இனிது விளக்குமாறுபோல இதனையும் விளக்கியருளுவார்; அங்ஙனம் செய்தருளாமையானும் அல்லதூஉம், செவியன்றி முதற்கண் நிற்பது தோடேயாகலானும், அவ்வுரை போலியே யாமென்றொழிக. அற்றேல், எழுதுமறை என்றோதியருளிய ஆசிரியர் அஃதங்ஙனமாதற்குரிய வேத ஓதாதொழிந்த தெற்றுக்கெனில், அவர்தம் ஆசிரியர் மேலுரைத்துக் காட்டியவாறு இங்ஙனம் ஞானகாண்டம் ஞானபாதங்களினுள் பரந்து கிடக்கும் பொருளெல்லாம் குறிப்பாற் பெறப்படுமாறு வைத்தலின், ஆசிரியரும் அங்ஙனமாமாறு வைத்தருளினாராகலின், அல்லதூஉம், எல்லையிலோத் தகரமெய்யுடனெடுத்த என்னினும் அமையுமேனும் அங்ஙனமெடுத்தருளாது இங்ஙனம் எடுத்தருளினர், எல்லையிலாமறை என்னும் அம்மறையின் இயல்புடைமையான் இஃது எழுதும் மறையாயிற்றென்பது அறிவுறுத்தற்பொருட்டு.

அற்றேல் அஃதங்கனமாக, இனி, அவனியல்பறியுங் குதூகலமுடையேன் கூறுக எனில் ஈண்டு ஒருசாரார் கூறுமாற்றை மறுக்குமுகத்தான் அதுவகுத்தோதுதும். அவர் கூறுமாறு; இவ்வுலகிற்கு முதற்பொருளொன்றுளதாயினன்றே அதற்கு அங்கமுளதென்றல் கூடும். அவ்வாறு அம்முதற்பொருளொன்றுள தென்றலுமின்மையான் அதற்கங்க முளதென்றலு மின்றாம். அல்லதூஉம்

அஃது ஒன்று உளது எனக்கோடல் எற்றுக்கெனவும் கூறுவர். அது பொருந்தாமை காட்டுதும். பலவேறு உறுப்புடைத்தாய இவ்வுலகம் எழுந்து இருந்து அழியுமோர் காரியப்பொருளாமாகலின், அது தன்னைக் காரியப்படுத்துமொருவினைமுதலை யின்றி யமையாது. அற்றேல் அநித்தமன்றி நித்தப் பொருளெனக் கொண்டாமாகலின், அவ்வாறு அஃதோர் வினை முதலை வேண்டாதெனின், அற்றன்று. ஈண்டிருத்தல் காணப்படுமாறுபோல எழுதல் அழிதல்களும் கண்கூடுபற்றிக் காணப்படுதலின் அஃது அநித்தமன்றி நித்தமாதல் செல்லாமையின், அங்ஙனம் அழியுமவ்வுலகை மறித்தும் எழுமாறு செய்தற்கு ஓர் வினைமுதல் ஒருதலையான் வேண்டுமாகலான். இனி, செயற்கையாய எழுதலழிதல்கள் இயற்கை என்றற்கு ஏலாமையின் அதுபற்றியும் அவர் கருத்து நிரம்புமாறின்மையறிக.

இனி, எல்லாப்பொருளும் அவ்வச்சார்பில் தோன்றுமென்றலுமடாது. இல்பொருள், உள்பொருள் என்னுமிரண்டனுள் முன்னையதற்குத் தோற்றங் கூடாமையானும், பின்னையதற்குத்தோன்ற வேண்டாமையானும்.

அற்றேல், இத்துணையுங் கூறியவாறால் இவ்வுலகம் தனக்கோர் வினைமுதல் வேண்டப்பட்டு நிற்கும் என்ற தொக்கும்; இவ்வுலகிற்கு முதற்காரணம் மாயையே யாகலின் அதுவே தன் காரியமாகிய இவ்வுலகைச்செய்து கொள்ள வல்லும்; வினைமுதல் வேறு வேண்டா வெனின்? அறியாது கூறினாய். அது குடம் போல் சடப்பொருளே யாகலானும், குயவன் போல் உலகம் ஓர் அறிவுடைப் பொருளா னாக்கப்படும் காரியப்பொருளாமாகலானும், மண்போல் மாயை முதற்காரணமாகலின் அது சடமாதல் தானே துணியைப்படும். இனி உயிர் அறிவுடைப் பொருளாமாயினும் அஃது உடன் முதலியவற்றை எய்தின் அறியும், அல்லுழி அறியாமையான் அதுவும் அதனை ஆக்கும் வினைமுதலன்மை அறிக.

இங்ஙனம் உயிர், மாயை, என்பன வினைமுதல் அல்லவாதல் பெறப்படவே இவற்றின் வேறாய் இவற்றை ஆக்கும் வினைமுதல் எஞ்சிநின்ற இறைவனே என்பது இனிது விளங்கும்.

அற்றேல்அஃதங்ஙனமாக; சடவடிவாய இவ்வுலகை ஆக்குமிறைவன் குடத்தையாக்கும் குயவன்போலுமெனக் கோடுமெனின், அற்றேல், [illegible] அதனை அதற்கு முதற்காரணமாய அதன்கண் நின்று செய்யும், இறைவனிதனை யாண்டு நின்று செய்யுமெனின்? உலகுக்கு உபதுணைக்காரணமாய் காலம் தன் காரியம் எவற்றிற்கும் தானே தாரகமாய்த் தனக்குவேறு தாரகமின்றி நிற்றல் உனக்கும் ஒக்குமன்றே? அதுபோல் இறைவன் வேறு தாரகமின்றி நின்றே அதனைச்செய்தருளும். அற்றேல், அம்முத்தொழில் செய்யும் அக்காலம் முக்கால முதலியனவாய்ப் பலவேறு நிலையினிற்குமென்பது ஆகமநூற்குடம்பாடாகலின், அதுபோலத் தனக்கு வேறு தாரக

யின்றி நின்று அதனை ஆக்குமிறைவனும், அவ்வச்செய்கைகள் பற்றிப் பல வேறு நிலைகளுற்றுப் பந்தப்படும்போலும் எனின்? நன்றே வினயினய்; அவன் இவ்வுலகம் அனைத்தும் தன்கண் ஒடுங்கித் தோன்றத்தானும் அதனால் இலயம், போகம், அதிகாரம் என்னும் நிலையுட்பட்டுப் பந்தப்படுவானும், அதுபற்றி ஆண்டு பந்தப்படுதலின்றியும் நிற்குமாகலான்.

அற்றேல் அஃதாக, சுருதி மிருதி புராண இதிகாசங்களுள் இந்திரன், சந்திரன், ஞாயிறு, அங்கி, வருணன், வாயு, அரி, அயன், முதலிய அனைவரும் இறைவர் இறைவர் எனக் கேட்கப்படுதலின் இறைவனென ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டோன் அவர் தம்முள் எவன் கொல்லோ வெனின்? ஒதுதும் மனம் பற்றிக் கேட்பாயாக. பசு, பதி என்னும் இருவேறு பொருளும் எல்லாந் தம்முள் ஒப்ப உண்மையின் பிற இயல்பு பற்றித் தம்முள் வேறுபாடுணர முடியாதாயினும், எழுந்திருந்தழிவன வெல்லாம் பசுவும், அவையெய்தாது அவற்றை அவைக்குச் செய்து நிற்பது பதியும், என்ன இவ்வோரியல்பு மாத்திரையானே பதி பசு விரண்டற்கும் தம்முள் வேற்றுமை உணரக் கிடத்தலின் இந்திரன் முதல் அரி ஈறாக மேல்வைத்தெண்ணியோரனைவரும் அவ்வாறே எழுந்திருந்தழிதலும் ஆண்டே கேட்கப்படுதலின் எஞ்சி நின்ற சிவபரம்பொருள் ஒன்றற்கு மாத்திரம் அவை உண்மை யாண்டும் கேட்கப்படாமையானும், அவனொருவனே இறைவன்: அவுனெழித்தொழிந்தோர் அனைவரும் இறைவரல்லரென்பது தெற்றெனவறிக, அற்றேல் அவர் தம்மை வழிபட்டார்க்கு அவ்வப்பயனீதல் ஆண்டாண்டுக்கேட்கப்படுதலின் அவர்க்கும் அவ்விறைமை உளவாம் போலுமெனின்? அவர்தாம் முத்தொழிலுற்று நிற்போரென மேலோதிப்போந்தமையின் அவ்வாறிறந்து ஒழிதருங்கால் அஃதீவாரின்மையான் ஆண்டும் பிறுண்டும் அவ்வவர்மாட்டு நின்றும் நில்லாதும் அவ்வவற்றை ஈந்தருளுவான் அவன் ஒருவனே யாம். அற்றேல் ஒருவரை வழிபடப் பிறிதொருவர் பயனீதல் உலகின்கட் கண்டிலமால் எனின், சிவபத்தர் முதலியோரை இம்மைக்கண் வழிபட்டார்க்கு அது மறுமைக்கண் பயன்றருங் கடவுள்வேறென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததன்றே? ஈண்டும் அவ்வாறு தலைமையும் என்றொழிக. அற்றேல், தம்மை வழிபட்டார்க்கு அவ்வக்கடவுளரே எதிர்தோன்றி நின்று பயனீதல் கேட்கப்படுதலின் அவருதமதற்கு வல்லுநர் போலுமென மலையற்க. இறைவன் தன் ஆணையைத் தன் ஏவல்வழி நிற்கும் அக்கடவுளர்மாட்டுவைத்துச் செய்தல்பற்றியாகலானென்பது.

இனிச் செவியன் முதலிய ஆறும் ஒருதிறப்படாது அறுவேறு திறப்படுதலின் பாகுபாடு ஆறுடையது இத்திருப்பாவென்றுணர்க. அவ்வாறும் முறையே ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் ஒரு பொருளையே நுதலிவருதலின் ஒருதிருப்பாவாநேதினர். இம் முதற்பாகுபாட்டின் [illegible]ம் பொரு[illegible]ளாவது உருவத்திருமேனி சாதித்தற் பொருட்டுஅங்க முடைமை சா[illegible]த்தல்; [illegible]ஃது எம்பெருமான் திருச்செவியன் என்பதாம்.

அவற்கஃ[illegible]தோ இலதோ வென்னுமையப்பாட்டின்கண் அருவ வா[illegible]கிய மற்றொருசாரார் இறைவன் அங்கமும் அங்கியுமின்றி அவற்றின் வே[illegible]யுள்ளதோர் அருவுருவப் பொருளாமாகலின் அவனங்ஙனம் அங்காங்கிப்பொருளாகானெனவும், ஆகவே அதுபற்றி யவன் அங்கியாமெனச்சா[illegible]தித்தல் வான் மலருடைத்து, நீரிற்றேன்றலான் என்பதனோடொக்கு [illegible]னவும் கூறுவர்.

இன்னுமவர் கூறுமாறு இறைவன் அங்கமுடையன் என்பது கண் கூட்டின் வைத்தறியப் படுவதுமன்று ; விட்டு நீங்காது யாண்டுமுடனுய் நிகழுமேதுவின்மையின். அகக்கருவியான் அறியப்படுவதுமன்று, ஆகம அளவைபற்றி யறியப்புகுதும் எனின், அதுவும் ஈண்டு இந்நூலாக்கியோர் போல ஒருவராணுக்கப்பட்டதே போலுமாகலின் இதுபற்றி நிகழும் ஐயப் பாடே அதுபற்றியும் நிகழக் கிடக்குமல்லது ஒன்றிற்றுணிபு பிறவாமையின் அது பற்றி ஆகம அளவையா னறியப்படுமென்பது மின்மையான் இறை வற்கு அங்கமுடைமை அறியப்படாதென்பதாம்.

அல்லாதூஉம், அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய அவனுக்குச் செவிமுதலிய அங்கம் உளவாகவே அவற்றின் சமூகமாய தநுவும், தொழில் கரண, புவன போகங்களுமுள வெனப் படுதலின் அவைபற்றி நம்மனோர் போலச்சுட்டியறியப் படுமாகலான் அநித்தம், ஏகதேச அறிவு, கண்டாகாரம், நசிப்பு அறியாமை, துன்பு, முதலியன உடையனெனப்பட்டு அகண்டாகார.................ப் பிழம்பு என்னும் சிறப்பியல்புக்கு இழுக்காய் முடியும். அல்லதூஉம் அவற்கு உருவம் உண்டெனின் நம்மனோருருவ மாக்கற்கு நம்மினுயர்ந்தோ னொருவனுளனுமாறுபோல் அவனுருவமாக்கற்கும் அவனினுயர்ந்தானொரு வனுளனெனப்பட்டுத் தம்மின் "மிக்காரிலன்" என்னும் சுருதியோடு முரணிவழுவாம். இனி நம்மனோரானுகாத எண் சித்திகள் கைவந்த யோகிக ளொப்ப அவ்வுரு அவற்குளதாமெனின், அதுபற்றி அவன் அவ்வியோகி களோ டொப்புறுக்கப்படுதலின் அது தம்மோடு "ஒத்தாரிலன்" என்னும் சுருதியோடு முரணி வழுவாம்; ஆகலின் அவன் அங்க முடைமை அறியப் படாதென்பதாம்.

இனி அவ்விறைவற்குச் சத்தி|உருவமெனக்கோடலே இயைபுடைத் தெனின் உருவமெல்லாங் கண்டிதப்பொருளாமாகலின் பரிணமித்து அழிந்து ஒழியுமது அதற்குக்கூடுவ தொன்றன்மையான் அகண்டாகார .........பிழம்பாகிய இறைவன் மேலோதப்படும் அருவப்பொருளாகன் மாத்திரையே பொருத்தமுடைத் தென்பதாம்.

இங்ஙனம் பல வேறுய தடையெழுங்கால் அவற்றை ஒழித்து அங்கவுண்மை சாதித்தற்கு ஆசிரியரானேதப்படும் பொருள், ஈண்டுச்காம வெகுளிகளின்மையின் பொருளியல் பெல்லா முள்ளவாறுணர்ந்து மயக்க மின்மையினவ்வாறுணர்த்தும் உயர்ந்தோரானுணரப்படும் இறைவன் சாங்க உபாங்க அங்கப்பிரத்தியங்க முடையனுமென்பது.

எனவே இறைவன் செவிமுதலிய அங்கமுடையன் ; உண்மை யுணர்வுடையோரானுணரப்படுதலான், அவரான் உணர்த்தப்பட்டு எமக்குக் கை வந்தனவாய இஃதொழித் தொழிந்தன போலும், என்னும் அநுமானம் பற்றியும் அவனங்க முடைமை துணியப்படுமென்பதாயிற்று.

மேலாக்கப்பட்டுக் கிடக்கும் நூல்கள் நம்மனோரானுக்கப்பட்டு நிற்பனவுமன்றி இறைவனுனுக்கப்பட்டுச் சொல்வடிவிற்றாய் நிற்றலானும், அது பின் பாரம்பரியம் பற்றி வரிவடிவிற்று யெழுதப்பட்டு அவ்வாறே வழுவெய்தாதுண்மையானும், அதுபற்றி அங்கவியல்போதும் அந்நூல்கள் ஆதாரமல்ல வென்றல் ஏலாமையின், ஆகம அளவைபற்றி அறிவுறுத்த லமையுமாயினும், அவர் மதமே பற்றி யவரை மறுத்தற்பொருட்டு அங்க

முடைமையும், அநுமான அளவைபற்றிச் சாதித்து, அங்ஙனம் ஆன்றோரா னறியப்படுதல் பற்றி அங்கமுடைமை துணியப்படுமென்பது உணர்ந்து கோடற்கு உள்ளவாறுணர்ந்தோரான் உணரப்படும் இறைவனென உடம் பொடு புணர்த்தோதப்பட்டது. இவ்வாறு அநுமான அளவை பற்றி அவனங்கமுடைய னென்பது சாதித்து அருவ வாதிகளை மறுத்தல் செய்துழி, உருவ வாதிகள் காண்டலளவை மாத்திரையே யாதாரமல்லது கருதலளவை முதலியன ஆதாரமல்ல வாகலின் அவைபற்றிச் சாதிப்பன துணியப்படாவென்பார் அநுமான அளவையிலதேயாயின் உலகின்கண் முன்னெழும் பயனை நோக்கித் தொழில் செய்வாரிலராய் முடியும்; அஃதவர்க்குடம்பா டன்மையின், அதனாற் கருதலளவையும், அதனான் ஆகம அளவையும் ஆதாரமென உணர்த்தல் செய்துழி, அவருமதனான் மறுக்கப்படுவாராகலின் அவர் மதமே கொண்டு அவரை மறுத்து அங்க முடைமை காட்சியளவையின் வைத்துக்காட்டற் பொருட்டுக் காரணம் பிறிதொன்று வருமாறு;—

எம்மனோர் கண்ணிந்திரியத்தோடு உயர்ந்தோர் உணரக்கருவியாய கண்ணிந்திரியத்திற்குச் சிறிதும் வேற்றுமை யின்மையான். எனவே எம்ம னோர் கண்ணிந்திரியம் சாத்துவிக அகங்காரத்தினின்று தோன்றி உருவப் பொருளைக்காணுமாறுபோல, அவர் கண்ணிந்திரியமும் அதன் கண்ணின்று தோன்றி அதனை அங்ஙன மறிவனவன்றிப் பிறிதன்மையான் அது பற்றி அவையொரு நிகரன வாமன்றி வேறன்மையான் எம்மிந்திரிய வியல்புடைத்தாய அக்கண்ணிந்திரியம் பற்றி யவர் கண்டு துணிந்து போந்தனவும், யாமெமது கண்ணிந்திரியம் பற்றிக் கண்டு கொண்டவளவே யாதல் தெளியப்படும்.

அற்றேல் ஐந்தொழில் செய்யு மிறைவற்கு உருவமின்றியமையா தென்ற தொக்கும். அவ்வுருவாவது அருவமுதலிய மூன்றனுள் ஒன்றோ வன்றோ வெனின், அம்மூன்றும் அவற்கு வடிவமேயாம்.

அற்றேல் உருவடிவெல்லாம் ஒரு பெற்றிய வாகலின் அவ்வுரு வத்தின் வேற்றுமை யில்வழி அவ்வேறுபாட்டானாய பயனென்னை யெனின்? உறுப்பிகளது தாரதம்மியத்தான் உறுப்புக்களும் தாரதம்மிய முடையனவன்றித் தம்முள் ஒப்பன அல்ல. அற்றேல் அத்தாரதம்மிய மென்னை எனின் ஓதுதும். யோகிகள் நம்மனோர் அனைவரும் பாசத்தைப் பற்றி நிற்கும் உயிர்கள். அதுவன்றியும் ஒன்றையே செய்தலும், ஒன்றின் கட்டலைமையாதலும் ஆகிய சிற்றறிவு, சிறுதொழில், சிறுதலைமை யுடை யர்களாம். இறைவ னங்ஙன மன்றிப்பாச வீடெய்திய உயிரினின்று அறிவிப் போனாய பசுபதி. அல்லதூஉம் எல்லா அறிவு செயல் தலைமை களையு முடையன். இவ்வாறு உறுப்பிகட்குத் தம்முட்டாரதம்மியமுண்மையின் அதற்கேற்றவாறு பாசத்தைப் பற்றிக் கிடக்கும் பசுக்கட்கு அதனோடேற் புடைத்தாய சிற்றறிவைச் செய்யு மாயை யுருவமும், அகண்டாகார...... ......பசுபதிக்கு பாசவீடெய்திய ஆன்மாவுக்கு வியாபக அறிவைச் செய் யும் சத்தி உருவமுமாதலே இயைபுடைமையின் உறுப்புக்களினும் தாரதம் மிய முண்மை இனிது விளங்குதலின், அதனை அறியாது நீ அங்ஙனம் கூறுதல் பொருந்தாது.

அற்றேல், அவன் அருவப்பொருள் என்றற்படும் இழுக்கென்னை யெனின்? வான் முதலிய அருவப் பொருள் உருவத்தினியல்புடையதா காது. பிருதிவி முதலிய உருவப்பொருள் அருவத்தின் இயல்புடையதா காது திங்கள் முதலிய அருவுருவப்பொருள் அவ்வீரியல்புடைத்தாமன்றி அவற்றுள் இவ்வாறு ஒரியல்புடைத்தாகாது. இவ்வுலகுட்பட்ட பொருள் அனைத்தும் ஒன்று பிறிதொன்ற னியல்புடையதாகாது. ஆகலின் அகண் டாகார இறைவனை அருவப்பொருளே எனின்: அவனும் அவைபோல மாட்டாமை உடையன் எனப்பட்டு அவற்றுள் ஒருவனுய் முடியுமாகலின் அங்ஙனம் கூறுதல் உனக்கே வழுவாய் முடியுமென்று அறிந்து கொள்க.

அற்றேலஃதங்ஙனமாக, "சத்தியே வடிவென்றாலுந் தான்பரிணாம மாகும். நித்தமோ வழியும்" என்றோதிய இழுக்கிற்கிறை * என்னை யெனின்? அகண்டாகார இறைவன் பந்த முத்தியாகிய பசுபாச மென்னும் பதங்களையுடைய உயிர் மல மென்னும் இருவேறு பொருளின் தன்மைய னல்ல னுகலானும், அவை இலனுகவே அளவைகளா னளந்தறியப் படா மை யானும், அருவ முதலிய முத்திறங்களுள் இன்னனுவ னென்றுதல் அவைபடும் விருத்தி முதலிய மூன்றனுள் ஒன்றன்கட்படும் ஒன்றன்கட் படான் என்றுதல் வினவுதற்கோர் வினவுமின்று. அஃதின்மையின் அதற்கு உத்தரமுமின்று. அற்றேல் உருவமுடையா ரனைவரும் வேறுபடு தலும் ஏகதேசப்படுதலும் பந்தப்படுதலுமுளராதல் உலகிற் கண்டாமன்றே? இறைவற்கு உருவம் உளதாயின் அவையுமுளனெனப் பட்டு இழுக்காய் முடியும்போலுமெனின்? முடியாது.

ஒருவன் வேறுபடுதற்குரிய ஏது — தன்வயமின்மையும், ஏகதேசப் படுதற்குரிய ஏது — முற்றறிவு முற்றுத்தொழிலின்மையும், பந்தப்படுதற் குரிய ஏது — விழைவு, வெகுளிகளுமே பிறவன்மையான் அகண்டாகார இறைவன்கண் அவைகள் யாது மியையாமை யான். அவ்விழுக்குகட்கு நெடுஞ் சேய்த்தாய அவன் மலநீங்கிய உணர்வொடு செயலைப்பற்றி நிற்கு மாகலின் தாங்கருதிய தொரு திருமேனி தன்தாகக் கொண்டருளும். அற்றேல் அவ்விழுக்கு களிலனுய அவன் உருவமின்றி நின்றே எத்தொழி லும் செய்ய வல்லும் ஆகலான் உருவங்கோடலாற் போந்த பயனென்னை யெனின்? ஆன்மாவுக்குத் தன்னுடலைத் தொழிற்படுத்தற்கண் பிறிதோ ருடல் வேண்டாத வாறுபோல அகண்டாகார இறைவனுக்குத் தன்னுடலாய இவ்வுலகை இயக்குதற்பொருட்டுப் பிறிதோர் உடல் வேண்டா. அங்ஙன மாயினும் பசுப்பாகுபாடு மூன்றனுள் முன்னைய தொழித் தொழிந்த பாகு பாடிரண்டும் முறையே முன்னிலை படர்க்கைகளின் வைகி அறிவிப்பி னன்றி அறியமாட்டாமையின், அவைதாம் பொருட்டன்மை யறிந்து வீடு பேறெய்தற் பொருட்டுப் பிரிந்து தோன்றிப் பொருள் புலப்படாது சொல் வடிவிற்றாய்த் தம்முட் குழுமி ஒருங்கு கிடந்தன வாய முதனூலை அங்ஙனமாக வொட்டாது கோவைப் படுத்து ஆக்கற் பொருட்டும்; அதனை ஆசிரியர் வழிமுறையி னிறுத்தற் பொருட்டும் உருவம் ஒருதலையான் வேண்டப்படும். அற்றேலஃதாக ஈண்டோதியன வெல்லாம் ஒக்கும். செவி முதலிய உறுப்புக்களும் அவற்றின் கூட்டாய உருவும் அதற்குரிய பிறவுமுண்மையான் நம்மனோர் போலச்சுட்டி யறியப்பட்டு அகண்டா காரத்துக் கிழுக்காய் முடியுமென நீ மேலோதிப் போந்ததும் அடாது

* இறை—விடை.

என்னை? அவன் திருவுரு அருளே யாம்; ஆகலான் ஆன்மாவுக்கு அறி
வளிப்பதாய அவ்வுருவிற் காணப்படும் செவிமுதலிய உறுப்புக்களும்,
தொழிற் பாடும், சூல முதலிய கரணங்களும், புவனபோகங்களும், ஆகிய
அனைத்தும் அவ்வருள்வடிவாமன்றி வேறன்மையான் அவ்வருளுரு வனைத்
தும் ஆன்மாக்கள் பொருட்டன்றித் தன்பொருட்டன்மையான். சாங்க
உபாங்க அங்கப் பிரத்தியங்கம் என்னும் இவை பற்றி வாக்கு மனங்களா
னோதி யுணரப்படுமாயினும், வாக்கு மனாதீத கோசரமாய அகண்டாகாரப்
பொருளேயாம். அற்றேல் ஒத்தாரிலன் என்பதனோடு முரணு மென்னும்
ஆசங்கைக்குப் பரிகார மென்னை எனின்? அது மேற்காட்டினும், முன்
னரும் காட்டுதும்.

ஒருவனுக்குச் சிற்றுணர்வு நிகழச் செய்தல், சிற்றியல்புடைய
பொருட்கேயன்றி வியாபகப்பொருட்கேலாது. வியாபகவுணர்வு நிகழச்செய்
தல், வியாபகமுடைய பொருட்கே யன்றிச் சிற்றியல்புடைய பொருட்கே
லாது. ஆகலான் சிற்றியல்பானுணரு முயிர்கட்குச் சிற்றியல்புடைத்தாய
மாயை உருவம். வியாபகமாயுணருமிறைவனுக்கு அதுபோற் சிற்றியல்
பில்லாத சத்தி உருவமாமெனக்கோடலின் அவ்வொருவனே பசுபதி என்
பதூஉம், அதுபற்றி அவனை யொத்தாரில ரென்பதூஉம் பெறப்படும்.

முதற் பாகுபாட்டினுள் இறைவன் அருவமெனக்கொண்ட அருவ
வாதிகளை மறுத்துச் சிறப்பு வடிவம் தடத்த வடிவ மென்னும் இரு
வேறு வடிவங்களுள் தடத்தவடிவுண்மை சாதித்தற்கோதிய கார
ணங்களைக் காரணங்களாகச் சாதித்தவழி, காரணமுண்டு காரியமின்று
என மயங்கிப் பிதற்றுவாரை மறுக்குமுகத்தான் உருவுண்மை சாதித்தற்
கெழுந்தது இரண்டாவது பாகுபாடு.

இனி அவ்விறைவன் எழுந்தருளுங்கால் ஏறேறிப் போதரும் என்
பது ஆசிரியரானோதப்படும் பொருள்.

இது மேலைப்பாகுபாட்டுளோதிய செவி முதலியவற்றின் சமூக
மாய உருவமுடையவனாய் இறைவன் ஏறிப்போந்தருளுதற்கு ஆதார
முண்மையான் ஆதேயமாய உருவமும் ஒருதலை யென்பதுணர்த்து முகத்
தான் அவனிறைமை யியல்புணர்த்துகின்றது.

ஈண்டு அவன் ஏறு ஏறியருளுதற்கு ஏறொன்றுளதோ? இலதோ?
என நிகழும் ஐயப்பாடுபற்றி விண்டுவாதிகளும், அறவாதிகளும், அவரன்ன
பிறரும் கூறுமாறு.

அவற்கேறொன்று உளதாதலில்லை. அவனுலகின்கண் ஏற்றின
மின்மையானும், ஏறுவேறுளதாதற்கு யாதுமேது வின்மையானும். அல்ல
தூஉம் உலகின்கட் காணப்படுமிறைவர்கள் அவர்த மிறைமைக்கேற்புடைய
வாய கரி, பரி, இரதங்களின் ஏறுதலே மரபு. இவ னவற்றை யொழித்து
அதுகோடல் எற்றுக்கு எனவும் கூறுவர். அவரை மறுத்து அவர்க்கு
ஏறுண்மை சாதித்தற்கெழுந்த காரணம்;

"விண்டு மூர்த்தியும் அறக்கடவுளும், ஏற்றுவடிவெடுத்து ஏற்றுக்
கோடலான்" என்பதாம்.

எனவே திரிபுரமெரித்துடையனுய வவ்விறைவன் அதன்பொருட் டேறுங்கால்அவ்வமரராணுக்கப்பட்டு நின்ற உலகமுதலியவாய அத்தேரினச் சிற்றுழி ஆண்டு விண்டு விடைவடிவாகி அவனைச்சுமந்துகொண்டு நின்றன னெனவும்.

அனைத்து மொடுங்கி உழிதருமோர் ஊழிக்கால் ஒடுங்காதெஞ்சும் பொருள்வேறின்மையான், யாமு மிவற்ருேடு ஒருங்கொழித லொரு தலையெனப் பேரச்சமுற்று, யாம் ஒழியாது உளவாதற்கு உபாய மிதுவே யென்ருய்ந்தறிந்து ஈண்டு எஞ்சாப் பொருள் இறைவ னொருவனேயாம் ; அவனைப் புகல் புகுந்து வேண்டிக்கொள்ளுதுமாயின், சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனென்பவாகலான், அவனெம்மை யிவ் விடையூற்றினின்று நீக்கியருளும்எனத்துணிந்து அவனை யெய்தி அவ்வாறே வேண்டிக்கொண்டது அறக்கடவுள். வேண்டுவார் வேண்டுவதே யீயுமவ் விறைவன் அது செய்வானுய், அஃதிறவாமைக் குபாயமாகத்தன்னை ஏற்றுரு வெடுத்துச் சுமந்து கோடல் முதலிய பலவேறு நன்மைகள் செய்தருள, அதுபற்றி அவ்வறத்தெய்வம் இறவாது நின்று அவ்வேற்று வடிவான் ஏன்று கொண்டது எனவும், புராணங்களுள் யாண்டும் யார்க்கும் புலனுமாறு மிக்கு நிகழும் பெருவழக்காய்க் கேட்கப்படுதலின் அதனோடு மூரணிக் கூறுவார் ஒருவாற்ருனும் தெருட்டற்பாலரல்லர். ஆகலான் அவன் விடையேறியாமென்பது மேற்கொண்டது.

இதனுனே சங்கார காரணனுகலின் அவனே இறைவன் ஏனை யோர் அன்னரல்லரெனவும், விண்டு விடையாய்த் தாங்குழி, இவருள் யானிவனைத் தாங்கும் வன்மையுண்மையேன் எனத் தருக்க, இறைவ னதனை முருக்கற்பொருட்டுத் தன்னைத் தாங்கலாற்ருதவாறு செய்தருள, விண்டு ஏன்று கோடற்கரிதாய இறப்பப்பெரியதோர் துன்புற்று ஆற்ருது விழுந்து வேண்டிக்கோடலின், அதுபற்றியும் அரி அயன் முதலியோர் இறைவரல்லர் என்பதூஉம் ஈண்டும் இனிது விளக்கியவாறு.

மேலைப்பாகுபாடிரண்டானும் இறைவன் அங்காங்கிப் பொருளா மெனவும், அங்ஙனமாயினும் இறைமைக் கிழுக்கின்மையின் இறைவனவனே யெனவும் உணர்த்தியவழி, அற்றேல் இறைமைக்குரிய இயல்பு மூன்றனுள் மரபு வழுவாது சுமந்து நின்ற அறக்கடவுட் கின்பமும், வழீஇ அது செய்து நின்ற விண்டுவுக்குத் துன்பமும் ஈதன் முதலியவற்ருன் முழு முதற்றன்மை பெற்ரும். மற்றை முற்றறிவுண்மை எற்ருற்பெறுதும் என நிகழுந் தடையை ஒழித்தற் கெழுந்தது மூன்ருவது பாகுபாடு.

"இனி, பிறை மதி புனைவோன்" என்பது ஆசிரிய ரானே தப்படும் பொருள்.

எனவே உபப்பிரமருள் வைத்தெண்ணப்படுவா னொருவன் எல்லா மறியு மறிவு அறை போதலின் மதிக் கடவுளது விதிப்பயனறியாது அவற் கிட்ட அச் சாபமொழி அம்மொழிந்தாங்கு கில்லாது அம்[illegible]தியின் விதிப் பயனறிந்து அதற்கேற்ப அதனை யாற்றுதலின் அதுபற்றி அவற்கு முற் றறிவுண்மை துணியப்படு மென்பதாயிற்று. அற்றேல் அதனை முற்றவும் பற்றறச் செய்து கொள்ள மாட்டாமையுடையனுலோ வெனின், யாமீண் டெடுத்துக்கொண்ட பொருள் அது வன்மையான் அது அசங்கை யன் றென்றொழிக. மேற் பிராகிருதத்துள் அனைத்துமறியும் அறிவுண்மை,

யின்மைகள் பற்றி நிகழுமாசங்கைக்கு அஃதுளதாதற்குரிய இயைபுமாத் திரையே ஈண்டுரைப்பதல்லது, ஏனைய தாண்டைக் குரியதன்மையான் அதுபற்றிக் கூறுமந்நூல்களுட் கண்டுகொள்க என்பது தாற்பரியம். அற்றேல், அவ்வியல்பு ஈண்டுரைத்துக் கோடலாற் படுமிழுக்கென்னை யெனின், மற்றொன்று விரித்தலாமென்றொழிக.

இன்னும் அரிமுதலிய பிறர் மாட்டெய்து மதனை யொழியச் செய்தன் முதலியன ஆண்டாண்டு இனிதறியக் கிடத்தலின், அவரை வகுத்தோதா ராயினர். அற்றேல் அறவோருள் ஒரு சாரார் அதனை யிட்டு மறித்துணர்ந் துணர்த்தலின் அவரும் அதற்கு வல்லுநர் போலும் என மலையற்க. சிவோகம் பாவனை செய்து முற்றுப்பெற்ற அவ்வியைபு பற்றியே அவர்மாட்டு அது நிகழ்ந்ததன்றிப் பிறிதன்றாகலான். அற்றேல் மேலோதிய உபப்பிரமனும் ஒரோவொரு நாட்கு ஒரோவொரு கலையாய் ஒழிக — ஒழிந்தவ்வாறு மறித்து மேறுகவென அவ்வியல்புணர்ந்து உரைத்தானெனப் புராணங்களுட் கேட்கப் படுதலின் மேல் மதி விதி யறிந்திற்றிலன் என்றோதியது பொருந்தாதாம் போலுமெனின், அற்றன்று. அஃது முன்னிகழு மியைபு பற்றி அவனுணர்ந்துரைத்ததாக வைத்துரைக்குமோர் உபசாரமொழியே யாகலான்.

அற்றேலதற்கு ஆதாரமென்னையோ வெனின், நிகழுந்தடையை யொழித்து மேற்பொருளைச் சாதித்தற்கு எழுந்த காரணம்.

கருதிப்பொருளை யுள்ளவாறுணர்ந்து அவ்வாறு ஒழுகி அநுபவமுடைய தேசிகர் திருமொழி அங்ஙனம் உள்ளதாகலான். எனவே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கைகூடி மேம்பட்டார் உபதேச மொழி என்பதாயிற்று. "பெரியார் பெரிதும் சொலக்கேட்டும்" என்பதூஉம் ஈண்டுமிகுத்து உணர்ந்து கொள்ளப்படும்.

மேலைப்பாகுபாடுகள் மூன்றானும் இறைவனுவான் எல்லா ஞானம் எல்லா முதன்மைகளுமுடையனென்னு மியல்புகள் உணர்த்தல் செய்துழி, அற்றேல் எஞ்சி நின்ற அநுக்கிரக மெல்லாமுடையன் என்னு மேனையியல் பின்னும் போலுமென நிகழுந்தடையை ஒழித்தற் கெழுந்தது நான்காவது பாகுபாடு.

இனி "திரு நீற்றுச் சாந்துடையன்" என்பது ஆசிரியரானோதப்படும் பொருள்.

எனவே மகாசங்காரஞ் செய்யுங்கால் அது செய்யுமிறைவன் அச்சங்காரம் பண்ணப்பட்டதற்கு ஆதாரமாகிய மகாமயானத்து வெந்து கிடந்த மாசு தங்கிய உயிர் நீங்கிய உடல்களின் சாம்பரைத் தமது தூய உடம்பின்கண் அணிந்து கொள்வது அவையுமவ்வாறு தூய வாதற்பொருட்டு என்பதாயிற்று. அற்றாகலினன்றே இன்னும் மாசு தங்கிய என்பை அதனொடு தொழிந்த உயிர் தூய்மை எய்தற் பொருட்டுத் தூய்மை தங்கிய கங்கையுள் இடும் வழக்கு நிகழ்வதூஉம் என்பது, அற்றேல் உயிர் ஒழிந்து கிடந்த உடல் வெந்த நீறு மிகப்பெரியதோர் * அபாவனம் என்றோதலின் தூய தன்மையுடைய விறைவன் அதனை அணிந்தருளுங் கொள்கையோ வெனில், கங்காள கபாலங்களை அணிந்தருளுவானுடைய அவன்

---

* அபாவனம் — தூய்தன்மை

அவைபோலத்தனையுமணிந்தருளுதல் பொருத்த முடைத்தென்க. முன்னீருடன் கலந்து சிறிது சிறிதாய் அந்நீரியல்பைத் தலைப்படும் நன்னீர் அந்நீராதல் போலும் இதுவெனக் கொள்க.

அற்றேல் இதனாற்போந்த பொருள் என்னை என்னுந் தடையை ஒழித்தற்கு எழுந்த காரணம் "அயனரி முதலிய சேதனப் பிரபஞ்சமாய உயிர்வினை யொழிப்போனவனாகலான்" எனவே வினை வயத்தாற் பிறவியுட்பட்டுச்சிற்றறிவுடையராய்ப் பந்தமுற்று நிற்றலின், எகதேச அறிவை நிகழ்வித்துச் சிறுபோகங் கொடுத்து அதனால் பருவம் முதிர்வித்து வியாபக அறிவை நிகழ்வித்துப் பரபோகங் கொடுத்தலின், அது பற்றி அநுக்கிரகமெல்லா முடையன் என்றவாறாயிற்று.

அற்றேனும் அதனான் இறைவனுக்கு ஆகக்கடவ தென்னையெனின்? அவ்வாறு சிறுவாழ்வு கொடுத்துப் பேரறிவுட்படுத்துப்பெருவாழ்வளித்தல் அவன் கருணையாகிய குணவிசேடமாய் மேம்படுதலின் அதனின் வேறாய் ஆண்டைக் காகக்கடவது பிறிதில்லை என்க.

மேலைப்பாகுபாடுகள் நான்கானும் இறைவன் திருமேனிகொண்டருளுமியல்பும், அவனது இறைமையு முணர்த்துமுகத்தான் அவன் புறத்து நிகழ்த்தும் சிறப்புபகார முணர்த்தி இனி அகத்து நிகழ்த்தும் சிறப்புபகாரமுணர்த்து முகத்தான் அத்துவித இயைபுணர்த்தற்கு எழுந்தது ஐந்தாவது பாகுபாடு.

இனி "அறிவா யறிகின்றானென்பது" ஆசிரியரானோதப்படும் பொருள்.

இஃதென் சொல்லியவாறோவெனின்? இறைவனை யின்றியமையாத ஆசிரியர் ஒரு பொருளை உணருங்கால் அவ்விறைவன் ஞானசத்தி ஆசிரியர் ஞானசத்தி யெனத் தானெனப் பிரிப்பின்றி உடனாய்க் கலந்து நிற்ப, இறைவனும் அங்ஙனங்கலந்து நின்று தானுணர்த்தியதொரு பொருளை ஆசிரியருணர்ந்தார் எனவும், அவரை இடமாகக்கொண்டு நின்ற தான் உணர்ந்தானெனவும் வேறு வேறு உணருமாறின்றி இருவருணர்வும் ஒன்றனை யொன்று விடாது அத்துவிதமாய் ஒருங்கே உணர்ந்து போமாறு செய்து உபகரித்தருளும் என்றோதியவாறாயிற்று.

அற்றேல் உணர்வுடைப் பொருளாகலின் உயிர்க்கு உணர்த்தல் செய்தற்கு வேறாய் ஓர் இறைவன் வேண்டப்படான் என்பதே எம்மனோர் கொள்கை. அவ்வாறன்றி வேண்டப்படுமெனக் கோடல்செய்வார்க்கும் உயிருணர்வு ஒருதன்மையவாகாது தாரதம்மியமாய் உளதாதற்கு ஏது வினை எனவே கோடும் ஆகலான் அதுவே அதனைச்செய்யும் அதனின் வேறாய் உணர்த்துவானொருவன் உளனெனக் கோடல் எற்றுக்கெனின்; உழவு முதலிய உவமையொடு படுத்துப்பார்க்குங்கால், அவற்றிற்கு அவையே யன்றி நில முதலியனவும் வேண்டப்படுமாறு போல அவ்வினை பருவமுற்றுப் பயன்தருமாறு அதனின் வேறாய் ஓர் இறைவன் ஒருதலையான் வேண்டப்படும்.

அற்றேல் அவ்வினையோடு இயைந்து நின்ற உயிர்தாமே அதற்கு ஏதுவாமெனக் கோடல் தகும் ஆகலான் இறைவன் வேறுவேண்டா எனின், அறியாது கூறினாய். அவ்வுயிரும் ஒன்றனையுணருங்கால் தனித்துணர மாட்டாது பிறிதொன்றனைக் கருவியாகக்கொண்டு நின்றுணர்தலானும், அவ்வுணர்ந்து கொண்டதனை மறந்தொழிதலானும், அல்லதூஉம் தன்னியல் புணராமையானும், அவ்வுயிர்தாமே உணருமாறு யாண்டையதென்றொழிக

அற்றேல் அஃதாக, மேலோதிப்போந்த கருவியாய மாயையமே அதனைச்செய்யுமென்றாற் படுமிழுக்கென்னை எனின், அறியாது சொன்னாய்; அக்கருவி முதலியன அறிவில்லன வாகலான் அவற்றோடு அறிவுடைப் பொருளுமொன்று இயைந்து நின்று அறிவிப்பின் அறியும். அல்லாக்கால் அறியாமையின் இவற்றை யெல்லாம் இயைத்துணர்த்துவானோரிறைவன் இவற்றின் வேறாய் வேண்டப்படுமாகலான்.

அற்றேலதற்குப் பிரமாணமென்னை யென நிகழும் தடையை யொழித்தற்கெழுந்த காரணம்.

“ எல்லாமாய் அல்லவாய் உடனுமாய் நிற்றலான்.” எனவே உயிர்க்கு உணர்வு தொழில்கள் புலனுசலும், புலனை பின் தொழில்களிற் போயுற்றுணர்தலும், இறைவன் றிருவருளையன்றி யாகா. ஆகலான் அவ் வுணர்வு தொழில் புலனுதற்பொருட்டு அவ்வுயிரோடியைந்து நின்றருளும். அருளி அவ்வாறு புலனை உணர்வு தொழில்கள் பின் பொருள்களிற் போயுற்றுணர்தற்பொருட்டு அவ்வுயிர்களைத்தமக்கிடமாகக்கொண்டு நின்று அவைபோம் வழி யனைத்துமுணர்ந்துபோமாறு செய்து அப்பொருள்களினும் உடனாய் விரவி நின்றருளும். இங்ஙனமாகலான் அவை அவனை யொழிந்து தாமே தனித்துளவாதல் யாண்டுமின்றென்றவாறாயிற்று.

இறைவனுக்குக் கருவி முதலியன கூடி நின்று அறிவிக்கவேண்டாமையின் உயிர்க்குப்போல் தனக்குமேலொருவனை அவாவப்படுமென்னும் அனவத்தைக்கிடமின்றித் தானே தமியனாய் முத்திறத்தைத்தொழிலும் செய்தருளுமென்பது பிரமாணமுகத்தான் உணரக்கிடத்தலின் அதுபற்றி ஆசங்கை யின்மையுமறிக.

அற்றாயினும் கலியற்றலான் வரும் பயன் உயிர்க்காயவாறுபோல உயிரொடியைதலான் வரும் பயனும் அதனோடுவைக்கப்படும் இறைவனுக்கு ஆகாமற் செல்லும்; செல்லவே, இறைவனும் பந்தமுறுவனெனப்பட்டு வழுவாமாகலின், இறைவன் உயிர்போல் அறிவிப்பன் என்றலிழுக்காம் பிற வெனின், இறைவனையன்றி ஆன்மா தொழிற்படாதென்பதற்கு மேலோதிப் போந்த ஒழிபளவையே யன்றி உரையளவையுமினிது விளங்கக்கிடத்தலின் அதனையுணராது மீட்டும் மீட்டும் மயங்கிப்பிதற்றும் மடவோனே? எவற் றினும் வியாபித்தலையுமிறைவனொருகிரிற்றேன்றும் அவ்வுணர்வின் பயன் கன்மத்திற்கேற்ப வரும் உடலோடியைந்து நின்ற ஆன்மாக்கட் காவன வன்றி இறைவனுக்காமாறியாங்ஙனம்? அசேதனமாய பிரபஞ்சம் அவன் முன் விளங்கித் தோன்றுமுடியாமையான்.

அற்றேல், அவனுணர்த்துமாறு யாங்ஙனமாலோவெனின், உயிர் உடன் முதலியவற்றைக்கொண்டு நின்று உணருமாறுபோல, அவனிவ்வுலக முதலியவற்றைக் கைக்கொண்டு நின்று உணர்த்துமென்க.

இறைவன் இத்துணை விரவுப்பாடுடையனாய் எங்கும் நிறைந்து நின்று உபகரித்து வருதலும் அஃது அருட்கண்ணுடைய ஆசிரியரானை யார்க்கன்றி தமக்கொருவான் உணர முடியாது. அதுவும் பாகமுடையார்க் கன்றி அஃதில்லார்க்கு எய்தலாகாது. அதுவும் அவனையின்றி யமையாது. ஆகலான் அவ்வருட்கண்ணை. அவன் பாகமுணர்ந்து ஈயப்பெற்றோர்க்கே அவன் உணர்வுக்குணர்வாய் வைகி அங்ஙனமுபகரித்து வரும் அத்துவித இயல்பு இனிது விளங்கும்.

மேலைப்பாகுபாடு ஐந்தானும் இறைவற்குரிய இயற்கைத் திருவுருவும் உபசாரத் திருவுருவும் உணர்த்தல் செய்தும், அற்றேல் இனி உபதேசித்த தற்குரியனவேறில்லை போலுமென இப்பாமுகம்பற்றிக் கேட்பானுக்கு நிகழும் தடையைச்சிறப்புடைத்தாய மந்திரத்திருவுரு உணர்த்து முகத்தா னொழித்து, அவ்வாற்றானொழிபுரைத்தற்கு எழுந்தது ஆறாவது பாகுபாடு,

இனி "பிரமபுரத்துறை பெம்மான்" என்பது ஆசிரியரானோதப் படும் பொருள்.

பிரமபுரம் அயனான் வழிபடற் கிடமாயதோர் ஏதுபற்றி அப் பெயர்பெற்றதோர் இடவிசேடம். உறை பெம்மான் ஆண்டு எழுந்தருளி வைகும் அருவுருவப் பரம்பொருள். பெருமானென்பது திரிந்து நின்றது இனி, பெம்மான் எனக்கொண்டு பெம் என்பது விருப்பமெனக் கோடலு மொன்று. எனவே அகண்டாகாரப்பிழம்பாகிய சிவபரம்பொருள் ஆன்மாக்கள் படிமுறையானறிந்து உய்தி எய்தற் பொருட்டுத் தூலம் சூக்குமம், அதிசூக்குமம் என்னும் திருமேனிகள் மூன்று கொண்டருளி அத்திருமேனிகளின் வழிபடு மியல்பும் முதனூல்களுள் அவனான் வகுத் தோதியருளப்பட்டது. இங்ஙனமாகலின் அத்திருமேனி மூன்றனுள் வைத்துப்பருவமுறையான் மேம்பட்டுளவாய நுண்ணறி வின்மையான் அவற்றுள் உருவடிவொன்றனையே பொருளென அறிந்து உடல்ப்பற்றி நிகழும் செயலொன்றானே வேதத்துள் விதித்தவழி வழுவாது வழிபடற் பாலது தூலவடிவாம். அதுவே ஈண்டாசிரியர்க் கெழுந்தருளிப் போந்து அருள் செய்த திருவடி யென்றுணர்க.

இனி அஃது அடிப்பட்டுப்போகப்போக உளவாய பருவ விசேடத் தான் நுண்ணறிவுடையராய் அருவுருவத் திருமேனியே பொருள், ஏனையுரு வம் அதனை வழிபடற்கிடமாய திருமேனியென இ[illegible]றம் இரண்டும் பற்றியுள்ள செயல்களான் அவ்வாறு வழிபடற்பாலது சூக்கும வடிவென்றுணர்க அதுவே ஆண்டைத் திருத்தளியுள் எழுந்தருளி வைகும் திருவடி வென்றுணர்க.

இனி அடிப்பட்டுப் போகப்போக உளவாகும் பருவ விசேடத் தான் அதிநுண்ணறிவுடையராய் அருவத்திருமேனியே பொருள், முன்னைய விரண்டும் அதனை வழிபடற்கிடமாய திருமேனியென இவ் வாறறிந்து அகச்செய லொன்றானே ஆண்டைக்கேற்குமாறு வழிபடற்பா லது அதிசூக்கும வடிவாம். அதுவே ஆசிரியர்க்கு அத்துவித முணர்தற்கு மேலடுக்க நின்று! உபகரித்தருளிய திருவடி வெனக்கொள்க.

அற்றேல் அஃதெற்றுக் கென மாணாக்கனுக்கு நிகழும் தடையை ஒழித்தற்கெழுந்த காரணம்.

"பத்தர்க் கருளும் பஞ்சமந்திர ரூபியாகலான். எனவே உருத் துணர்தலின்றிச் சிவலிங்க முதலிய திருமேனி[illegible] சிவமெனக் கண்டு வழிபடும் சரியையாளர்க்கும். அருவப்பொருளாய சிவன் ச[illegible]றை மந் திரங்களாற் சிவலிங்க முதலிய திருவுருக் கோலினான்' எனக[illegible]ருதி மந்திர நியாசத்தான் வழிபடும்! கிரியையாளர்க்கும், யோகிகள் உள்ளமெங்கும் இல்லமாய் வாழும் சிவன் 'இத்திருமேனியிலும்' இருந்து பூசைகொண் டருளுமெனக் !கருதிச் சாத்திய மந்திரங்களான் வழிபடும் யோகிகட்கும் இனி அவர்போல ஏகதேசமாய்க் குறித்தலின்றி அன்பு மாத்திரையான்

ஆண்டு வழிபடும் ஞானிகட்கும் முறையே ஆண்டு வெளிப்படாது நின்றும், அவ்வம்மந்திரங்களான் அவரவர் விரும்பிய வடிவாய் அவ்வவர் தாரதம்மியம்பற்றி அவ்வப்போது தோன்றி நின்றும், கருணை மிகுதியான் அவ்வன்பே தானாய் எப்போதும் ஆண்டு வெளிப்பட்டு நின்றும் இவ்வாறு வேறு வேறு அருளுமாற்றானருளும் ஆகலான் அஃதறிந்து ஆண்டு வழிபடுக. அது செய்யாமை செய்யற்க என்பதாம்.

இது பொருட்டன்மை யலங்காரம். ஆகவே அஃது அணி எவற்றிற்கு முற்பட்டதாய தன்மையணியின் பாகுபாடு நான்கனுள் முதலதாய் முன் நிற்குமாறு போல இதுவும் எந்நூற்கும் முன்னூலாய திருமுறைகளின் முற்பட்டு நிற்றற்குரியதாயிற்று. பிறவணிகளோடியைந்து வேறுபடு மேனையணிபோல வேறுபடாது தனித்து நிற்குமதுபோல இதுவும் வேறுபடாததாய் மேம்பட்ட முதனூலெனக் கொள்க. முதனூல் முதலிய மூன்றனுள் இது முதனூற்குரிய இலக்கண முடைத்தாகலானும், இது அதன் முதற்றிருப்பா வாகலானும், அதன் சொற்பொருளொழிய உள்ளுறைப்பொருள் யாதெனின் இவன் என்பதனால் இவனதியல்பே இத்திருமுறையுள் யாண்டுமுளவாமென ஆசிரியர் முன்னர் நூற்பயன் கூறியவாறு. ஏனைய யாண்டுமினிது விளங்குமாறு விரித்து வைத்தோதுப.

---

திருச்சிற்றம்பலம்.

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

Printed at the Sri Ambal Press, Shiyali.